

# பகிர்ந்துண்ணல்

சமரபாகு சீனா உதயகுமார்

# பகிர்ந்துண்ணல்

சமரபாகு சீனா உதயகுமார்

வெளியீடு
அபிஷேக் பதிப்பகம்

நூல் விபரம்

நூல் தலைப்பு : பகிர்ந்துண்ணல்

வகை : சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : சமரபாகு சீனா உதயகுமார்

முதற்பதிப்பு : 28.01.2014.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

ஆசிரியர் முகவரி : கூனந்தோட்டம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.
தொ.பே.0783015144.
மின்னஞ்சல்: uthayan7@gmail.com

பதிப்பு : அபிஷேக் பதிப்பகம்
கரணவாய் வடமேற்கு,
நவிண்டில்.
தொ.பே.07792201368.

ISBN : 978 - 955 - 41258 - 3

எங்கள் குடும்பக் குலவிளக்கு

**அமரர்**

**கந்தையா - தர்மலிங்கம்**

[சிவப்பிரகாசம்]



## சமர்ப்பணம்

அப்பா...! அப்பா...! என்று
எத்தனை முறை நாம் அழைத்தாலும்
அப்பா வருவாரோ...?
"சின்ன" பிள்ளையைப் போன்ற
எங்கள்
"செல்ல" அப்பாவிற்கு
இந்நூல் சமர்ப்பணம்!

- அமரரின் குடும்பத்தினர்

# கிழக்கு மாகாணத்தில் இருந்து
# இரு ஆசிர்வாதங்கள்

## ஆசியுரை

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

இது பொய்யாமொழிப் புலவரின் திருவாக்கு ஆகும்.

இக்குறளுக்கு அமைவாக வாழ்பவர்தான் சமரபாகு சீனா உதயகுமார்.

இவரின பல ஆக்கங்களை நான் விரும்பி வாசித்திருக்கிறேன். வானொலிகளில் இவர் தொகுத்து வழங்கும் தொடர் கவிதைகளையும், சுவையான கதைகளையும், நகைச்சுவை தொடர்களையும் கேட்டு ரசித்திருக்கிறேன். மற்றவர்களும் கேட்க வேண்டும் என்று தூண்டியிருக்கிறேன்.

சிற்பி என்பவன் தன் கற்பனையை தான் நினைத்தபடி உளியால் செதுக்கி திறம்பட மற்றவர் கவரும் வண்ணம் சிலை வடிக்கிறான். ஆனால்,

எழுத்தாளர்களோ தன் கற்பனைத் திறனையும் செயல் திறனையும் ஒருங்கு கட்டி எழுத்து மூலமாக சமூகத்திற்கு தந்து போகிறார்கள். அவர்களில் ஒருவராகவே சமரபாகு சீனா உதயகுமாரை நான் காண்கிறேன்.

இவர் சமூக மேம்பாட்டிற்காகவும் சமூகத்திற்காகவும் இளைய சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுபவர். கணித பாடத்தினையும், பொது உளசார்பினையும் கற்பிப்பதில் தேர்ச்சிபெற்றவர்.

எல்லோருக்கும் எழுதும் ஆற்றல் கிடைக்கலாம். ஆனால், வாசிப்போரின் மன நிலைக்கு ஏற்றால் போல அதை எழுதிச் செல்வதுதான் கஸ்டமான விடயமாகும்.

சமரபாகு சீனா உதயகுமார் வாசகர்களை கஸ்ரப்பட வைப்பதில்லை. அவர் எழுதி தருகிற விடயத்தை நாம் படிக்கிறேபாது சலிப்பு ஏற்படுவதில்லை. மாறாக இன்னும் படிக்க வேண்டும் என்ற உற்சாகமே பிறக்கிறது. அந்தளவுக்கு இவரின் உரைநடை மிக இலகுவானது.

சிறுவர்களின் மனநிலைக்கு ஏற்ப அவர்களுக்கு இலகுவில் விளங்கக்கூடிய வகையில் எழுதுகிறார்.

வீரகேசரி வாரமலரில் இவரின் சிந்தனை தூண்டும் கதைகளை வாசித்து வருகிறேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக அறிவுரை சொல்லுகின்றன.
இவரின் திறன் இறைவன் கொடுத்த கொடை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
இதுவும் திருவள்ளுவரின் திருவாக்குத்தான்.
இதற்கமைவாக வாழும் இவரின் ஆற்றலில் கணிதம் பாடம் படித்த பலரும் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதை அறிந்தபோது மனம் சந்தோசம் காண்கிறது.
சிறந்த கணித ஆசானாக இருந்துகொண்டு எழுத்தாற்றலில் ஈடுபட்டு வருவது யாவருக்கும் கிடைக்கக் கூடிய ஒன்றல்லவே. இது ஒரு மகத்தான அரிய விடயமே.

இவரின் எழுத்தாற்றல் இன்னும் சிறப்புற வெளிப்பட வேண்டும்.
ஈன்றபொழுது பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்
இவரின் தாய் இவரை தவமிருந்து பெற்றிருக்க வேண்டும்.
தாயைப் பெருமைபடுத்தி தன்னையும் பெருமைக்குள் சேர்த்துள்ளார் என்பதோடு
மகன் தந்தைக்காற்றும் பெரும் உதவி
இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்
என தன் தந்தைக்கும் பெருமை சேர்துள்ளார்.
இத்தகைய சிறப்புகள் உள்ள சீனா உதயகுமாரின் சிந்தனை தூண்டும் சிறுவர் கதைகளுக்கான தொகுதிக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**திருமதி யோகாம்பிகை கனகசபை**
சமூகசேவகி
மட்டக்களப்பு.
வல்வெட்டித்துறை சமரபாகு மண் பெருமை கொள்கிறது.

## வாழ்த்துப்பா வடிவில் ஒரு ஆசிர்வாதம்

பனைவளம் மிகுந்த படித்தவர் நிறைந்த
இணையிலாப் பதியாம் வல்வெட்டித்துறையில்
இலக்கியப் பணி செய்யும் இளையவன் உதயா
துலக்கிய முயற்சிகள் கதை கட்டுரை கவிதை

காலத்தை வீணாய் கழிப்பதை விடுத்தவர்
ஞாலம் போற்றும் நற்றமிழ் பணி செய்பவர்
நீண்ட காலம் நிலைத்திருக்கும் அவராக்கம்
ஈண்டுளோர் சுவைத்திட ஈந்தார் எமக்கதை

எழுத்தை ஆழ்பவன் எண்ணும் செயல் யாவும்
பழுத்த கனிச்சுவையாய் நாவில் இனித்திருக்கும்
வாசிப்புப் பசிக்கு வகையான தீனியென
யாசிப்பர் அவராக்கம் யாங்களும் தேடியதை

வாழும் போதே வாழ்த்தும் மரபதனை
நாளும் பேணில் நல்லூக்கம் பெற்றிடுவர்
எங்கள் தலைமுறைக்கு ஏற்ற செல்வமதை
பங்கமறத் தருபமவர் பணியென்றும் வாழ்கவே

தானாக வந்த தளராத அனுபவங்கள் யாவும்
பேனாவின் நிதர்சனமாய் பெருமைகள் தந்தன
அழுகையும் வந்தனவே அருமருந்தான உறவுகளின்
வீணான சாவு நிலை அறந்திருந்தபோது

பகிர்ந்துண்ணல் மரபை மறவாமல் பகிர்ந்தாய்
வெற்றிகள் உன் பின்னே வருவது கண்டு
வாழ்த்தவென்று ஆவல்கொண்டு வாழ்த்துகிறேன்
அன்புகலந்த வணக்கமுடன்

**-தம்பிலுவில் ஜெகா**
கிழக்கு மாகாணம்.

## அணிந்துரை

சமரபாகு சீனா உதயகுமார் ஒரு பல்துறைப் படைப்பாளி. இவரது கவிதைத் தொகுப்புக்கள், கட்டுரைகள், சிறுகதைகள் பலவற்றை நான் வாசித்து மகிழ்ந்திருக்கிறேன். பாராட்டியிருக்கிறேன்.

இப்பொழுது "கதை சொல்லல் மூலம் அடுத்த பரிணாமத்தை இவர் எட்டியிருக்கிறார். தனது துறைக்கு ஏற்பவும், ஊடகத்திற்கு ஏற்பவும் தனது எழுத்து நடையை மாற்றிக் கொள்ளும் இவரின் எழுத்துத் திறன் வளர்ந்து வருகிறது.

மேடையில் கவிதையை அளிக்கை செய்யும் இவரது ஆற்றலை எனது 'கம்பனில் நான' நூல் வெளியீட்டு மேடையில் கண்டு இரசித்தேன்.

பகிரிந்துண்ணல் என்ற இந்த நூல் கதை சொல்லல் என்ற வகையில் சிறுவர் இலக்கியத்துறையைச் சார்ந்தது என்றே சொல்லலாம்.

பஞ்ச தந்திரக் கதைகள், விக்கரமாதித்தன் கதைகள் முல்லாவின் கதைகள், தெனாலி ராமன் கதைகள், எனத் தமிழில் பல கதை நூல்கள் வெளிவந்துள்ளன.

சிங்கள மொழியில் ஜாதகக் கதைகள், மாதன முத்தா கதைகள் எனப்பல உண்டு. ஆங்கில மொழியில் றீட்

அன் ரெல் (Read and Tell) என்ற புத்தகத் தொடர் மிகவும் பிரபலமானது.

இந்த நூல் இவைகளிலிருந்து சற்று வித்தியாசமானது இருப்பினும், நோக்கம் ஒத்ததாகவே இருக்கிறது. இன்றைய காலத்துக்கு ஏற்ப இவர் கதை சொல்லலைச் செய்கிறார்.

தமிழில் கதை சொல்லும் மரபு மிக நீண்டது. மகாபாரதம், இராமாயணம் முதலான இதிகாசங்களும், இவற்றிலுள்ள கிளைக் கதைகளும் கதை சொல்லல் மூலம் செவிவழியாகத்தான் தமிழில் முதலில் பரப்பப்பட்டன.

இதிகாசக் கதைகள், இதிகாசங்களிலுள்ள கிளைக் கதைகள், மற்றும் புராணக்கதைகள், அவற்றிலுள்ள இதிகாசக்கதைகள் யாவும் உபகதைகள் என்று கிராமிய வழக்கில் பயின்று வந்தது.

இரவில் நித்திரைக்கு முன் விளக்கை அணைத்து விட்டு பாட்டியோ, பாட்டனோ, தாயோ தந்தையோ சிறுவர்களுக்கு கதை சொல்ல சிறுவர்கள் ஆர்வமாக ம்...ம்... என ம்.. கொட்டிக் கேட்டு அரை குறையில் சில வேளை நித்திரையாகி விடுவார்கள். ம்.. கொட்டுதல் நின்றதும் கதை சொல்லல் நின்று விடும். மீண்டும் மறு நாள் தொடங்கும்.

குழந்தைகளைத் தாலாட்டுப் படித்து தூங்க வைத்தது போல சிறுவர்களை கதை சொல்லி தூங்க வைத்தது தமிழ்ச் சமூகம்.

அருச்சுனன் சுபத்திரைக்கு சக்கர வியூகத்தை எப்படி உடைத்து உள்ளே செல்வது என்று கதை சொல்ல அவளின் வயிற்றிலிருந்து அபிமன்யு கதை கேட்டார். என்கிறது, பாரதம்

பிரகலாதன் தாயின் வயிற்றில் இருந்தபடியே நாரதமுனிவர் தாய்க்குக் கூறிய மகாவிஷ்ணு மூர்த்தியின் கதைகளைக் கேட்டான் என்கிறது இராமாயணம்.

இந்த வகையில் பார்த்தால் கதை சொல்லல் தாலாட்டுக்கும் முந்திய இலக்கியவகை என்று தான் சொல்லவேண்டும் போல் தெரிகிறது.

இதிகாச புராண இராஜா இராணிக் கதைகள் மட்டுமன்றி சாதாரண சமூகக் கதைகளும், வீரதீர சாகசக் கதைகளும், அற்புத அதிசயக் கதைகளும் எனப் பலவகைக் கதைகளும் செவி வழிக் கதைகளாக சொல்லப்பட்டுள்ளன.

எழுத்துக்கு முந்திய இலக்கிய வடிவம் கதை சொல்லல் தான். உரை நடை இலக்கியம் தோற்றம் பெற்றபின் பதினெட்டாம் நூற்றாண்டின் பின் தான் கதைகள் உரைவடிவம் பெறத் தொடங்கின.

வீராசாமிச் செட்டியாரின் விநோதரச மஞ்சரி, வீரமா முனிவரின் அவிவேக பூரண குரு எனப்படும் பரமார்த்த குரு கதை, முதலானவை சிறுவர்களையும் பெரியவர்களையும் கவர்ந்த கதைகளாக வெளிவந்தன.

பெரிய எழுத்துக் கதைகள் முதியவர்களையும், படிப்பறிவு குறைந்தோரையும் ஈர்த்தன. அவர்கள் தாங்கள் படித்து விட்டு கதை சொன்னார்கள்.

தென்கச்சி. கோ.சுவாமிநாதனின் வானொலிப் பேச்சுக்கள் கதைகளே அவை 'இன்று ஒரு தகவல்' என்ற பெயரில் தொடர் நூல்களாக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

சமரபாகு சீனா உதயகுமாரின் பகிர்ந்துண்ணல் என்ற தலைப்பிலான இந் நூலின் பல கதைகள் உள்ளன. கந்தையா வாத்தியாரப்பு சொல்லும் கதைகளாக அவை சொல்லப்பட்டுள்ளன. அவை யாவும் சுவாரஷ்யமான முறையில் சொல்லப்பட்டுள்ளன. எல்லாக் கதைகளுமே சிறப்பாக உள்ளன.

சிந்தனை தோன்றி அறிவு வளர்ந்தது என்ற கதையில் ரோமன் இலக்க ஒன்பதை எப்படி ஆறு ஆக்குவது புத்தி சாதுர்யக் கதை. ஒருவரின் பிறந்த கிழமையைக் கண்டு பிடிக்கும் கதை கணித ஆர்வத்தைத் தூண்டும் கதை.

நிலம் யாருக்குச் சொந்தம் தத்துவக் கதை. 'அன்பு செல்வம் வெற்றி' அறநெறிக் கதை. 'மரமொன்றின் கதை' சூழலியலின் கதை. 'நம்மால் முடியும்' உற்சாகப் போதனைக் கதை. 'பாசம்' மருத்துவ உளவியல் கதை. 'தவளையும் மனிதனும்', விஞ்ஞானக் கதை. 'போராடுபவர்க்கே வாழ்க்கை' முயற்சியின் கதை. என எல்லாவற்றையும் தனித்தனி பாகுபடுத்தலாம். விபரிக்க இங்கு இடமில்லை.

பழ மொழிகள் மருவிவிட்டன என்ற தலைப்பில் கழு - தைக்க தெரியுமாம் கற்பூர வாசனை என்பதுதான் கழுதைக்கு தெரியுமா கர்பூரவாசனை என மருவியது என்கிறார் உதயகுமார்.

கலசத்துக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை என்பது தான் உண்மை வடிவம் என்றனர் பலர். இருப்பினும் உதயகுமாரின் கருத்தில் அதிகம் பொருத்தப்பாடு தெரிகிறது. 'குறி வைக்க ஏற்ற இராம சரம்' என்பது தான் 'குருவிக்கு ஏற்ற ராமேஸ்வரம்' என மருவியது என்கிறார்கள். இன்னும் பல சொல்லலாம்.

மகாத்மா காந்தி டால்ஸல்ால், நெப்போலியன், அலெக்ஸசாண்டர், ஐன்ஸ்டீன், அமிதாப்பச்சன் முதலானவர்கள் பற்றிய கதைகள் இன்றைய சிறுவர்களுக்கு மிகவும் பயன்பாடுடைய கதைகள்.

சிறுவர்களை அழைத்து இருத்தி கேட்கச் செய்ய முடியுமாயின் இப்படி எவ்வளவோ கதைகளைச் சொல்லலாம். ஔவையார் சிறுவர்களை அழைத்து அவர்களுக்கு ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி எனப் பாடி அறிவுரை வழங்கினார். என்கிறார்கள்.

இன்று பாடசாலைகளிலோ, வீடுகளிலோ, கதை சொல்லும் வழக்கம் பெரிதும் குறைந்து விட்டது. இல்லை என்று கூடச் சொல்லலாம். கதைகளைக் கேட்கப் பிள்ளைகள் தயாராகத் தான் இருக்கிறார்கள். சொல்வதற்குத் தான் பெரியோர்கள் தயாராக இல்லை. நேரம் இல்லை. அக்கறை இல்லை.

சமரபாகு சீனா உதயகுமாரின் இம் முயற்சி பெரும் பாராட்டுக்குரியது. இது பெரு வெற்றி பெறவேண்டும். இன்னும் இன்னும் இத்தகைய நூல்கள் வெளிவரவேண்டும்.

இந்நூல் பாடசாலைகளில் நற்சிந்தனை சொல்வதற்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரு சிறந்த கைநூலாக விளங்கக் கூடியது. பேச்சாளர்களுக்கு பெரும் பயன்தரக் கூடியது.

பெற்றோர் இந்நூலைப் படித்து பிள்ளைகளுக்குக் கதை சொல்ல வேண்டும். பிள்ளைகள் தாமாகவே வாசிக்கவும் வேண்டும். இவை இரண்டும் நடைபெற்றால்

ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க நினைக்கும் சீனா உதயகுமாரின் எண்ணம் நிறைவேறும். இதுவே படைப்பாளிகள் யாவரதும் நோக்கம்.

சீனா உதயகுமாரின் இம் முயற்சி பெரு வெற்றி பெறவும், இவர் இன்னும் பல நூல்களைப் பல் துறை சார்ந்து படைக்கவும் எனது வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ் வளர்க தமிழ்ப் பண்பாடு.

தமிழ் அதர்
90, திருநாவற் குளம்
வவுனியா

இனிய
**அகளங்கன்**
18.01.2014

## மௌனமாய் சில வார்த்தைகள்

நவிண்டில் சிவப்பிரகாசம் ஐயா என்றால் எங்கள் எல்லோருக்கும் பழக்கமான பெயர் அது.

1990 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட நேரம். பாரிய பொருளாதார சிக்கல்களை யாழ்ப்பாண சமூகம் சந்தித்திருந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். மறக்கவும் மாட்டார்கள்.

அப்படியான ஒரு சூழ்நிலையில் வேலையின்றி தவித்தோர் எத்தனை பேர்? வேலை செய்தால் தானே கூலி கிடைக்கும்! கூலி கிடைத்தால்தானே தீனி கிடைக்கும்! இத்தனை பொருளாதார இறுக்கத்திற்குள்ளும் யாழ்ப்பாண சமூகம் பல்பாடங்கள் கற்று வாழக் கற்றுக்கொள்ளத் தொடங்கியதென்றால், அவை எல்லாம், இன்று வியப்பின் ஆச்சரியக் குறிகளே!

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு வந்ததால் நாம் என்ன இருட்டில் வாழ்ந்து விட்டோமா? இல்லை, அதற்காகத்தானே கண்டு பிடித்தோம் ‘சிக்கன விளக்கு’ எனும் புதுவகை விளக்கு.

சீனி தட்டுப்பாடு வந்தது! என்ன செய்தோம் நாம்? பனங்கட்டி, பாணிபோட்ட பனாட்டு, சர்க்கரை இவை எல்லாவற்றையும் அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினோம்.

மா தட்டுப்பாடு வந்தது! ஓடியலை இடித்து மா ஆக்கினோம். விரும்பியளவு புட்டு அவித்துச் சாப்பிட்டோம்.

மின்னசாரம் இல்லாது போனது! சைக்கிள் டைனமோவில் இருந்து மின்சாரம் பெற்று கசற் நாடாவிலிருந்து பாட்டுக் கேட்டு ரசித்தோம்.

சவர்க்காரம் இல்லாது போனது! பனங்காயும் புத்துமணலும் சவர்க்காரம் இல்லாத குறைகளை நீக்கிச் சென்றன.

அச்சுத்தாள்கள் இல்லாது போயின! அப்பியாசக் கொப்பித்தாள்களில் சஞ்சிகைகளும் புத்தகங்களும் வெளியாகி அசத்திக்கொண்டிருந்தன.

இப்படி பல சம்பவங்களை சொல்லலாம்.

இப்படியான ஒரு காலத்தில்தான் எங்கள் ஊரில் எல்லா வீடுகளிலும் பெட்டி பாய் இழைக்கிற சீசன்

தொடங்கியிருந்தது. எங்கள் ஊரில் மட்டுமில்லை அயல் ஊர்களிலும் இது நடைமுறையாக இருந்தது.

ஆண்கள் ஒருசிலர் பெட்டி பாய்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து திண்ணை வேலிச் சந்தைக்குப் போய் விற்றுக் காசாக்கி வருவார்கள். அந்தக் காசின் வரவு பார்த்துத்தான் ஒவ்வொரு வீடுகளிலும் அடுப்பு புகையும் என்ற ஒரு நிலமையும் இருந்தது.

அதனால், பெட்டி பாய் இழைத்து சீவியம் போக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவர்கள் தான் தெய்வமாக இருந்திருக்கிறார்கள்.

இன்றைய நாள் போல் அன்று போக்குவரத்து வசதிகள் எதுவும் இருப்பதில்லை. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அரச வாகனங்களும் நேர அட்டவணைக்கு ஏற்றால் போலவே இயங்கி வந்திருக்கின்றன.

வடமராட்சியின் உள் ஊர் கிராமங்களில் இருந்து சைக்கிள் கரியரில் பெட்டிகளை உயரமாகக் கட்டி திண்ணைவேலிச் சந்தைக்கு சைக்கிளை வலித்து இழுத்து ஓடுவார்கள். வீதிகளோ கரடுமுரடானவை.

சைக்கிள் ரியூப் காற்றுப் போனால் அந்தோ பரிதாபம்தான். நீண்ட தூரம் அந்தப் பாரத்தோடு

சைக்கிளினை உருட்டிப் போனால்தான் எங்கோ ஒரு இடத்தில் சைக்கிள் ரியூப் ஒட்டுகிற கடை தென்படும். அங்கே நீண்ட நேரமாக காவல் இருக்க வேண்டும். ஏலவே சைக்கிள் ரியூப் ஒட்டவென்று பலரும் காத்திருப்பார்கள். அப்படி சைக்கிள் பெரும் பயனுள்ள வாகனமாக அன்று இருந்திருக்கிறது.

இப்படி பல கஸ்ரங்களின் மத்தியில்தான் இவர்களின் வியாபாரம் நடக்கும்.

இப்படியானவர்களில் ஒருவராக எங்கள் சிவப்பிரகாசம் ஐயாவும் இருந்தார்.

பெரிய கொற்றாவத்தையில் பெட்டி பாய்களை எடுத்துக்கொண்டு எங்கள் ஊருக்கு வருவார். எங்கள் வீட்டு படலைக்குக் கிட்ட வந்ததும் 'டீயே, பொடிச்சியள், அங்கால போட்டு வாறன்' என்று சொல்லி ஒழுங்கைக்குள் இறங்கிப் போவார்.

அங்கே போய், பெட்டி பாய் எடுத்துக்கொண்டு வருவதற்குள் எங்கள் வீட்டில் பெட்டிகளை சைஸ் சைஸ்சாக அடுக்கி கட்டி வைத்துவிடுவார்கள். நேரம் எப்பிடியும் ஒன்பதரை மணியைத் தாண்டியிருக்கும்.

சிவப்பிரகாசம் ஐயா உள்ளே வருவார். ஆறுதலாக வாங்கிலில் இருந்து கதைப்பார். பசும்பால் தேநீரை பனங்கட்டியோடு கடித்து சுவைப்பார்.

பால்தேநீர் குடித்து முடியும் நேரம் வெத்திலைத் தட்டத்தைக் கொண்டுவந்து அப்பா வைப்பார்.

'இனி உப்பிடியே நாச்சிமார் கோயிலடியில் மூண்டு வீடு, மலையந்தோட்டப் பக்கமும் ஆறேழு வீடு அப்படியே எடுத்தனெண்டால் வீட்டை போடுவன்' என்று சொல்லுவார்.

'ஏன், சிவப்பிரகாசமையா, உங்கட ஊரில ஆரும் பெட்டி பாய் இழைக்கிறேலையோ?' என்று நான் கேட்டிருக்கிறேன்.

'அதெல்லாம் ரிப்ரொப்பாக கட்டி வீட்டில குடுத்திருப்பினம். அதால எனக்குப் பிரச்சினை இல்லை' என்று அவர் சொல்லும்போது அவர் முகத்தை நான் பார்ப்பேன். அதில் ஒரு சந்தோசம் பரவி இருக்கும்.

அவர் வீடுபோய்ச்சேர எப்படியும் பதினொருமணிக்கு மேலாகும். நான் நினைக்கிறேன் அவர் நித்திரைக்குப் போவதென்றால் எப்படியும் பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகுமென்று!

மீண்டும் அடுத்தநாள் நான்கு மணிக்கு எழும்பி ஆயத்தமாகிவிடுவார். வெயில் வருவதற்குள் கிளம்பி விடுவார். இரண்டு மணித்தியாலங்கள் சைக்கிளில் ஓடி திண்ணைவேலிச் சந்தை போவார். அவற்றினை விற்று வீடு வர இரவு ஆறுமணியாகும். குளித்து, சாப்பிட்டு மீண்டும் இரவிரவாக பெட்டி பாய் எடுக்க கொற்றாவத்தை, சமபாகு என்று வந்து விடுவார்.

இயங்கும் ஒரு சக்கரமாக உழைத்து தன் குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாக காவல் செய்த கனவான் அவர். பிள்ளைகள் எல்லோரும் சின்னவர்களாக இருந்தார்கள்.

பிள்ளைகள் படித்து உத்தியோகம் பார்க்கவேண்டும். தான்பட்ட கஸ்ரங்களுக்கு பிள்ளைகளின் உயர்வு நிலையில் சந்தோசம் காணவேண்டும் என்றறெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தார்.

இளையமகன் சுமனில் ஒரு நம்பிக்கை வந்தது. நாட்டின் போர்ச்சூழல் அதை மாற்றி விட்டிருந்தது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் சுமன் தேடப்பட்டான். அடிக்கடி வீடு வந்து சுமனை விசாரித்தபோது பெத்த மனம் கலங்கத் தொடங்கியது. அவனுக்காகவே நாளும் நித்திரையின்றி தவித்தார். அவனை நினைத்து இரவு பொழுதுகளில் அழுதிருக்கிறார். சுமன் எங்கு

சென்றாலும், அவனுக்கு தன்னை விட்டால் வேறோரு காவலில்லை என்பதுபோல் சுமன் பின்னே அலைந்தார். அவரின் இந்தத் தியாகத்தால்தான் சுமன் உயிர் காக்கப்பட்டான்.

இருந்தாலும், இவரின் எண்ணங்கள் சுமனுக்காக ஏங்கத்தொடங்கின. சுமனின் அருமருந்தான கல்வி இப்படிப் பாழாகிப் போய்விட்டதே என்று நாளும் துவண்டார். இதனால் இரத்தம் அழுத்தம் கூடிவர இவரின் ஒரு காலையும் கையையும் இயங்காமல் செய்து விடுகிறது.

இத்தகைய நோய் வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தபோதும் கல்வி பற்றிய சிந்தனைகள் அவர் மனதை விட்டு என்றும் நீங்காத ஒன்றாகவே இருந்தன.

ஆனாலும் அவர் எண்ணங்களும் ஏக்கங்களும் வீண் போகவில்லை. தன் பேரன் சுஜீந்திரனில் நம்பிக்கை வைத்தார். காலம், நேரம் எல்லாம் நன்றாகவே கூடி வருகின்றன. சுஜீந்திரன் பல்கலைக்கழகம் தெரிவாகிவிட்டான். சிவப்பிரகாசம் ஐயாவின் சந்தோசத்திற்கு அளவே இல்லை. அந்த சந்தோசமிகுதியால் மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கினார்.

பொல்லு பிடித்திருப்பார். தன் நிமிர்ந்த நடையில் நவிண்டில் ஊரைச் சுற்றி வலம் வருவார். பிள்ளைகளின் வீடுகள், உறவுகளின் வீடுகள் சென்று அளவளாவுவார்.

பேரப்பிள்ளைகளின் வயதொத்த பிள்ளைகளை வழி தெருவில் கண்டால் படிப்பு பற்றிக் கதைப்பார். படிக்கவேண்டும், அரசாங்க வேலையில் சேர வேண்டும் என்றெல்லாம் புத்திகள் சொல்லுவார்.

இத்தகைய குணாம்சங்கள் நிறைந்த பண்பாளரின் திடீர் மறைவுச் செய்தி ஊருக்கும் அயலூருக்கும் அதிர்ச்சியாகவே இருந்தது.

இத்தகைய பண்பாளனுக்கு பிள்ளைகள் செய்யும் கைம்மாறுதான் 'பகிர்ந்துண்ணல்' எனும் இந்நூலாகும்.

கதை சொல்லும் உத்தியில் அமைந்திருக்கும் இந்நூலில் விஞ்ஞானம், கணிதம், சமயம், சமூகவியல், உளவியல் போன்ற பல்சுவை அம்சங்கள், சின்னச்சின்னக் கதைகள் மூலம் தெளிவு செய்யப்பட்டிருக்கின்றன.

கந்தையா வாத்தியாரப்பு, சிறுவர்களுக்கு இந்தக் கதை சொல்லியிருந்தாலும் பெரியவர்களுக்கும் மிகப்பொருத்தமாகவே இவை அமைந்து வருகின்றன.

இங்குள்ள கதைகளை கதைகள் என்று எண்ணாது, மளமளவென்று வாசித்து முடிக்காது, மிக நிதானமாகவும் கிரகித்தலோடும் வாசித்துப் பாருங்கள். அப்படிப் படிக்கிறபோது உங்கள் எண்ணங்களில் ஒரு துள்ளல் தோன்றும். அந்தத் துள்ளலால் உங்கள் மனம் மட்டுமில்லை அயல் மனங்களையும் துள்ள வைக்கவேணும் என்ற ஓர் எண்ணமும் உற்சாகமும் உங்களுக்கும் தோன்றும். அந்தளவுக்கு உங்கள் மனங்களை மிகத் தெளிவாகக் கொண்டுவரக் கூடியவை இக்கதைகள்.

ஒருவர் மனதை புண்படுத்தி இன்பம் காணும் இன்றைய மனிதர்கள் பலரில் இவை போன்ற சுவையான கதைகளைச் சொல்லி மனங்களைப் பண்படுத்தினால் என்ன? என்றுதான் என் எண்ணம் நினைக்கின்றது. இப்படியொரு எண்ணம் இருந்தால் மற்றவர்கள் எத்தனை துன்பங்களை எங்களுக்குத்தர நினைத்தாலும் அவை எல்லாம் பயனற்றவையே. இதை நீங்களே உணர்வீர்கள் என்பது என் எண்ணமாகும்.

இத்தொகுதியில் உள்ள ஆக்கங்கள் அனைத்தும் 'வீரகேசரி வாரமலரில்' தொடர்ச்சியாக வெளிவந்து அறிஞர்கள், எழுத்தாளர்கள், பெரியவர்கள், மாணவர்கள் பலரின் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறது.

என் நீண்ட வாசிப்பின் மூலம் எனக்குள் உள்வாங்கப்பட்ட இனிய எண்ணங்களோடு சின்னவயதில் இருந்து படித்து சுவைத்த ஒருசில கதைகளையும் முகநூலில் வாசித்து பெற்ற கதைகளையும் என் சிந்தனைகளோடும் அறக் கருத்துக்களோடும் என் உரைநடையில் சொல்ல முயன்றிருக்கிறேன். அப்படி சொல்லுவதற்கு கந்தையா வாத்தியார் என்கிற கற்பனை பாத்திரமும் அக்கதைகளைக் கேட்டு ரசிப்பதற்கு மாணவர்கள் சிலரை கற்பனையாகவும் உள்வாங்கியிருக்கிறேன்.

இங்கே, மாணவர்களுக்கு கந்தையா வாத்தியார் சொல்லும் அறிவுரைகள் யாவும் நம் எல்லோருக்கும் நன்கு பொருத்தமுடையனவே. இவ்வாறு பகிர்ந்து கொள்வதால் மனதுக்கு ஒரு நிம்மதி அவ்வளவுதான்.

நீங்களும் இவற்றையெல்லாம் யாருக்கும் பகிரலாம். நிச்சயமாக உங்கள் உள்ளமும் பெருமகிழ்ச்சி காணும் என் நம்பிக்கையாகும்.

இத்தகைய சிறப்பம்சம் கொண்ட ஆக்கங்களை தன் தந்தையின் நினைவாக வெளியிட வேண்டும் என்று சுமன் என்னிடம் வந்து கேட்டிருந்தார். திடீரென வந்து கேட்போது அதற்கான ஆயத்தங்களைச் செய்ய எனக்கும் தயக்கமாவே இருந்தது.

இத்தொகுதிக்கான அணிந்துரையினை வழங்கி உதவுமாறு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஐயாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டேன். நிலமையின் இக்கட்டான சூழ்நிலையினையும் எடுத்துச் சொன்னேன். தனக்கும் பல இறுக்கமான பல வேலைகள் இருப்பதாகச் சொன்னார். சில செக்கன்கள் யோசித்தார். கட்டாயம் தல்லாம் என்று ஊக்கம் சொன்னார். 'உடனடியாக பிரதிகளை அனுப்பி வையுங்கள்' என்றும் சொன்னார்.

அவரின் இன்சொல்லால் மிக்க மகிழ்ச்சி அடைந்தது என் உள்ளம்.

இதுபற்றி வவுனியாவில் இருக்கும் என் ஒன்றுவிட்ட அண்ணன் இன்பரூபன் அண்ணாவிடம் தெரிவித்தேன்.

'சிவா நாளைக்கு வவுனியா வாறார். அவரிடம் கொடுத்து விடுங்கள். நான் அகளங்கன் சேரிடம் கொடுக்கிறேன்' என்றார். அப்படியே நானும் கொடுத்தேன். அடுத்நாள் சிவா அண்ணாவிடம் கொடுத்துவிட்டேன். அதை வாங்கி அகளங்கன் ஐயாவிடம் இன்பரூபன் அண்ணா கையளித்திருந்தார்.

அடுத்தடுத்த நாள் காலை எட்டு மணிபோல் அகளங்கன் ஐயாவிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. 'தம்பி, உரை

எழுதிவிட்டேன். எப்படி இதை உங்களிடம் கையளிப்பது?' என்று கேட்டார்.

உடனடியாக இதை இன்பருபன் அண்ணாவிடம் சொன்னேன். அவர் அதை வாங்கி அனுப்பியிருந்தார்.

ஒரு இக்கட்டான சூழலில் கிடைக்கிற உதவி என்பது வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாகும். அந்த வகையில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஐயாவின் உதவி என்றும் மறக்க முடியாத பேருதவியாகும். இதை இடை நின்று சரியாக நெறி செய்த இன்பருபன் அண்ணாவையும் என்றும் என்னால் மறக்க முடியாது.

மேலும், இந்தமாதிரியான அவசர சூழ்நிலையில் அட்டைப் படத்தினை வரைந்து மின்னஞ்சலில் அனுப்பி உதவி புரிந்த தவம் (சுப்பிரமணியம்) ஐயாவின் பங்களிப்பும் மகத்தானதே!

இலங்கையின் புகழ்பூத்த ஓவியர்களில் முக்கியமானவர் இவர். இலங்கை அரச கல்வித திணைக்களத்தால் வெளியிடப்படுகிற பாடப் புத்தகங்களுக்கு படங்கள் வரைகிற ஓவியர் இவர். தினகரனில் வருகிற இவரின் படங்களைப் பார்த்து ரசித்து தவம் ஐயாவோடு அடிக்கடி தொலைபேசியில் உரையாடியிருக்கிறேன். ஒருமுறை தான் நேரில் சந்தித்துக் கதைத்த அனுபவம்

நெஞ்சம் நெகிழ நடந்து கொண்ட இத்தனை உயர்ந்த உள்ளங்களுக்கும் என் மன நிறைவான நன்றிகள்.

இந்த ஆக்கங்கள் வீரகேசரியில் தொடராக வருவதைப் பார்த்து படித்துவிட்டு அதன் ரசனைக் குறிப்புகளை எழுத்து வடிவாக்கி தந்திருக்கும் திருமதி. யோகாம்பிகை கனகசபை அம்மாவிற்கு என் மனம் நிறைவான நன்றிகள்.

வீரகேசரி வாரமலரில் தொடராக வெளிவருவதற்கு ஒத்தாசை நல்கிய ரேணுகா பிரபாகரன் அக்காவிற்கும் புத்தகத்திற்கான ISBN குறியீட்டினை உள்வாங்குவதற்கு உதவி புரிந்த விரிவுரையாளரும் எழுத்தாளருமான நண்பர் தேவமுகுந்தன் அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகள் என்றும் உரித்தாகும்.

இனி தொகுதியின் உள்ளே செல்லுங்கள். படியுங்கள். படித்துவிட்டு மற்றவர்களுக்கும் பகிருங்கள். உங்கள் விமர்சனங்களை உண்மையாக எனக்கு எழுதுங்கள். அப்போதுதான், இன்னும் கற்கவேண்டும் என்ற ஆவலும் அவாவும் என்னையும் தூண்டும்.

அன்புடனும் நம்பிக்கையுடனும் விடைபெறுகிறேன்.

-சமரபாகு சீனா உதயகுமார்.

# பதிப்பக உரை

எங்கள் குடும்ப குல விளக்கு அமரர் கந்தையா தர்மலிங்கம்(சிவப்பிரகாசம்) அவர்களின் நினைவாக பகிர்ந்துண்ணல் எனும் நூலை வெளியீடு செய்வதில் மனதுக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிறது. எங்ளைப் பிரிந்து சென்ற அப்பா எங்களோடு இருப்பதாக உணர்கிறோம்.

அப்பா, தான் இருக்கும் காலங்களில் சின்னஞ் சிறுவர்களுக்கும் இளையவர்களுக்கும் புத்திகள் சொல்லுவார். கல்வியின் முக்கியம் பற்றி எடுத்துரைப்பார். அவருக்குப் பொருத்தமான முறையில் இங்கே கந்தையா வாத்தியாரப்பு எனும் பாத்திரமும் அமைந்திருக்கிறது.

சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய இக்கதைகள் வார வீரகேசரியில் வருகிறபோது அக்கதைகளை படித்துவிட்டு அவரிடம் சென்று இவை பற்றி வினாவினோம். இக்கதைகளை அப்பாவின் நினைவாக வெளியிட எண்ணியுள்ளோம் என்ற எம் விருப்பை சொன்னபோது அவர் மிக உற்சாகமாக முன்வந்தார்.

மிகக் குறுகிய காலத்தில் இப்புத்தகம் வெளிவருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய சமரபாகு சீனா உதயகுமார் அவர்களுக்கு எங்கள் குடும்பம் சார்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**-அபிஷேக் பதிப்பகம்.**

# பகிர்ந்துண்ணல்

## *1*

## அருளாளர்கள்

கந்தையா வாத்தியாரப்பு வருகிறார் என்றால் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்க்கெல்லாம் ஒரே கொண்டாட்டம். அவர் இருக்கிற ஆலமர நிழலுக்கு ஓடி வந்துவிடுவார்கள். சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம் என்று எல்லாத்துறைகளும் சிறப்பாகக் கற்றுத்தெளிந்த ஒரு நிறைகுடம்.

ஆலமர நிழலின் ஒரு கல்குந்திலிருந்து சிறுவர்கள் விளையாடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார். விளையாட்டு முடித்து களைப்பாறுவதற்காக வாத்தியாரப்பு முன் அமர்ந்து ஏதாவது புதினம் அறிய ஆவலாக இருப்பார்கள். வாத்தியாரப்புவிடம் கதைகள் கேட்பதென்றால் சிறுவர்களுக்கும் ஒரே கொண்டாட்டம்தான்.

கந்தையா வாத்தியாரப்புக்கு எழுபத்தி ஐந்து வயதுக்கும் குறையாமல் இருக்கும். தூய்மையான வெள்ளைவேட்டி கட்டியிருப்பார்.

இந்த வயதிலும் வெற்றிலை போடுவதில்லை. சுருட்டுக் குடிப்பதில்லை. கந்தையா வாத்தியாரப்பு சிரித்தார் என்றால் அத்தனை பற்களும் முத்தாகப் பளிச்சிட்டு மின்னும். அப்படி பற்களையும் தூய்மையாக வைத்திருப்பார்.

வாத்தியாரப்பு...! வத்தியாரப்பு...! இண்டைக்கு என்ன கதை சொல்லப்போறீங்கள்? வித்தியன் துருத்திக்கொண்டு கேட்டான்.

எல்லாரும் வந்திட்டிங்களோ..?வாத்தியாரப்பு கேட்டார.

ஓம்...! ஓம்...! வாத்தியாரப்பு. எல்லோரும் ஒருமித்து பதில் சொன்னார்கள்.

வாத்தியாரப்பு கதை சொல்லத்தொடங்கினார்.

வாழ்வெனும் வெகுமதியை கடவுள் நம் எல்லோருக்கும் வழங்கியிருக்கிறார். நாம் வாழும் வாழ்தலைப் பொறுத்தே அது மகிமை அடைகிறது மாணவர்களே!

சிலர், படிப்பு மட்டும் இருந்தால் வாழ்வாங்கு வாழ்ந்து விடலாம் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம்தானே! இன்னும் சிலரோ பணம் மட்டும் கிடைத்து விட்டால் நினைத்தவற்றை செய்து முடிக்கலாம் என்றும் விருப்பமானவற்றை வாங்கி மகிழலாம் என்றும்

சொல்லுவதை கேட்டிருக்கிறோம். இவற்றை நீங்களும் அவதானித்திருப்பீர்கள்தானே!

ஏன் வாத்தியாரப்பு, பணம் இருந்தால்தானே வசதியாக வாழலாம்? சத்தியன் கேட்டான்.

படிப்பு இருந்தால் மட்டுமே வாழலாமென்று அப்பா என்னிடம் அடிக்கடி சொல்லுவார். சந்தோஷ் சொல்லி முடித்தான்.

வாத்தியாரப்பு கொடுப்புக்குள் சிரித்தார்.

சரி சரி அவசரப்படாதேங்கோ? வாத்தியாரப்பு சொல்லத்தொடங்கினார்.

சிலர், படிப்பு பணம் இரண்டும் கிடைத்திருந்தும் எப்படி வாழ்வது என்று தெரியாமலேயே பாழாகிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு சிலர்தான் எப்படியும் வாழ முடியாது இப்படித்தான் வாழவேண்டும் என்று நினைத்து வாழ்கிறார்கள். இப்படித்தான் ஒருமுறை, ஏபிரகாம்லிங்கனின் நண்பர் ஒருவர் ஏபிரகாம் லிங்கனிடம் கேட்டாராம்

படிப்பதால் பணம் கொட்டப்போவதில்லை. பிறகேன் நீங்கள் எப்போது பார்த்தாலும் எதையாவது படித்துக் கொண்டிருக்கிறீர்களே? என்று

அதற்கு ஏபிரகாம் லிங்கன் என்ன சொன்னார் தெரியுமா?

பணம் சேர்ப்பதற்காக நான் படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படி பண்போடு வாழவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக படித்துக் கொண்டிருக்கிறேன். என்றாராம்.

எல்லோரிடமும் அன்பாக இருக்கும் பண்பும் நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கமும் மட்டுமே ஒருவரை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லும்.

அன்பு பணிவு அடக்கம் மூன்றும் கிடைத்த ஒருவரிடமே முழுமை அறிவினைக் காணமுடிகிறது. கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்து வாழ்வோரிடமே எதையும் நாம் கற்கமுடிகிறது. தமக்காக மட்டும் வாழாமல் பிறரின் நன்மைகளுக்காக பாடுபடும் இப்படியானவர்களைத்தான் அருளாளர்கள் என்று சொல்லுகிறோம்.

கதைகேட்டு முடிந்ததும் மாணவர்கள் சுறுசுறுப்பானார்கள்.

நன்றி வாத்தியாரப்பு. நாங்கள் வீட்டுக்குப் போகிறோம். நாளையும் ஒருகதை சொல்லவேணும் என்று ரஜித்தமன் கேட்டான்.

அழகிய வெள்ளிப்பற்கள் தெரியும்படி சிரித்திருந்தார். மாணவர்கள் குதூகலத்துடன் வீடு போய்க் கொண்டிருந்தார்கள்.

## 2.
## தீயவர் நட்பு

கல்குந்தில் வாத்தியாரப்பு இருக்கிறார். மாணவர்கள் விளையாடி முடித்து ஓடி வருகிறார்கள். வாத்தியாரப்பு கதை சொல்ல ஆயத்தமாகுமுன்

எல்லோரும் வந்தீட்டீங்களா பிள்ளைகள்?

ஓம்...ஓம்... வாத்தியாரப்பு. எல்லோரும் ஒருமித்து சொன்னார்கள்.

வாத்தியாரப்பு கதை சொல்லத் தொடங்கினார்.

பிள்ளைகளே, பொதுவாகவே ஒருவருடைய உருவத்தின் பதுமையையும் பேச்சின் மென்மையையும் பார்த்து ஏமாறுபவர்கள் அதிகமாக இருப்பார்கள். படிக்காதவர்கள் மட்டுமில்லை படித்தவர்களும் இதில் ஏமாறிவிடுவது கண்கூடான உண்மையாகும்.

ஒருவர் தீயவரோடு பழகும்போது அவரின் கெட்ட இயல்புகள் பற்றி மற்றவர்கள் எடுத்துச் சொல்லுவார்கள். தீயவருக்கு ஒரு துன்பம் வரும்போது அது அவரோடு பழகுபவருக்கும் தொற்றிவிடுவதுண்டு.

அந்தத்தீயவருக்கு ஒரு தீங்கு வரும்வேளை இவர்களை மாட்டிவிட்டு அவர்கள் தப்பித்து விடுவார்கள்.

எதிலும் யாரும் எப்போதும் எச்சரிக்கயோடு இருப்பது மட்டுமில்லாமல் எங்களில் அன்புடையோரின் அறிவுறுத்தலையும் ஆலோசனையையும் நாம் கேட்டுத்தான் ஆக வேண்டும். அப்பிடியில்லை என்றால், வரும் தீங்கினை அவரவர் அனுபவிக்க வேண்டிவரும்.

இதற்குப் பொருத்தமான உருவக்கதை ஒன்றை சொல்லுகிறேன் கேழுங்கள் பிள்ளைகள்.

மனிதனுடைய முதுகின் நடுவிலுள்ள பள்ளம்போல இருந்தது அந்த ஓடை. நல்ல சிந்தனையாளர்களின் மனம்போல தெளிந்த தண்ணீர் அதில் ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரையோரத்தில் பாம்பு ஒன்று வாழ்ந்து கொண்டிருந்தது.

ஒருநாள் அந்த அழகிய ஓடை நீரில் நீந்தி வந்த ஆமைக்குட்டி ஒன்றை அந்தப்பாம்பு பார்த்தது. அதனுடன் பேசியது. இந்தச்சந்திப்பின் பிறகு அவை அடிக்கடி சந்தித்து உரையாடி வந்தன.

இதுவே நட்பாக மாறி வளர்ந்தது. இதற்குப் பிறகு இரண்டும் நெருக்கமாக பழகி வரத்தொடங்கின.

ஆமைக்குட்டி, பாம்புடன் நட்பு வைத்து பழகுவதை பார்த்த தாய் ஆமை, தன்குட்டிஆமை பாம்புடன் பழகுவதை விரும்பவில்லை.

பாம்பு நல்ல குணம் உடையதல்ல. அதனுடன் பழகாதே! உனக்கு ஆபத்து வரும்! என்று தன் குட்டி ஆமைக்கு அறிவுரை சொன்னது தாய் ஆமை.

அப்படிச் சொல்லியும் தாய் ஆமையின் அறிவுரையை குட்டி ஆமை ஏற்க மறுத்தது. தாய்க்குத்தெரியாமல் அது பாம்புடன் சேர்ந்து உல்லாசமாக கரையில் வலம் வந்து விளையாடி மகிழ்ந்தது.

சாதுவான குட்டிஆமை, தீயகுணமுள்ள பாம்புடன் பழகுவதை காகம் பார்த்து விட்டது. குட்டி ஆமை தனியாக இருந்த நாளொன்றில்

பாம்பு தீயகுணம் உடையது. அதனுடன் நட்பு வைத்து பழகாதே! எப்பவோ ஒருநாள் இந்தப் பாம்பினால் உனக்கும் ஆபத்து காத்திருக்குது. என்று நயமாகச் சொன்னது காகம்.

அதற்குப் பிறகும் குட்டிஆமை பாம்புடன் பழகுவதை நிறுத்தவில்லை. முன்பு போலவே பாம்புடன் நட்பாகப் பழகி வந்தது.

ஒருநாள் பாம்பும் குட்டி ஆமையும் கரையின்மேல் பேசிக்கொண்டு வந்தன. பாம்பு வருவதை குரங்கு ஒன்று கண்டிருந்தது. அந்தப்பாம்பு தன் குட்டியைக்

கடிக்கத்தான் வருகிறது என்று குரங்கு நினைத்தது. மரத்திலிருந்து வேகமாக இறங்கியது. ஒரு கல்லைக் கையில் எடுத்தது. பாம்பை நோக்கி வீசியது.

குரங்கு கல் எடுப்பதை அவதானித்த பாம்பு உடனேயே பக்கத்தில் இருந்த வளைக்குள் (பொந்துக்குள்) புகுந்து விட்டது.

குரங்கு எறிந்த கல் குட்டி ஆமையின் முகத்தைத் தாக்கியது. கல் அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் ஒழுகியது. இப்போது, குட்டி ஆமையின் நெஞ்சில் தாய் ஆமையின் அன்புரையும் காகம் சொன்ன அறிவுரையும் நினைவுக்கு வந்து போயின.

மூத்தோரின் சொல் கேளாமல் நடந்தமையாலேயே எனக்கும் இந்தத் தண்டனை என்று குட்டி ஆமை நினைத்துக்கொண்டது.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார்.

ஆகவேதான், மூத்தோர் சொல் நெல்லிக்கனி போன்றது என்ற வாசகத்தை மனதில் நிறுத்துங்கள் பிள்ளைகள். எச்சரிக்கையோடும், நிதானத்தோடும் வாழவேண்டும்.

நல்லது பிள்ளைகளே இன்றுபோய் இனி நாளை வாருங்கள்.

3.

## எம்மதமும் சம்மதம்

இன்று எல்லோரும் நேரத்திற்கே வந்திருந்தனர். ஆனாலும், கந்தையா வாத்தியாரப்பு இன்னும் வரவில்லை. வாத்தியாரப்புவிடம் கதை கேட்காமல் விட்டால் இவர்களுக்கு அன்றைய பொழுது சங்கடமான பொழுதுதான்.

ஏன் வாத்தியாரப்புவை இன்னும் காணவேயில்லை மகிழ்நன் கேட்டான்.

ஓம்...ஓம்...., வீட்டில போய் பார்த்து வருவோமா? தீபிகா கேட்டாள்.

அதோ.., வாத்தியாரப்பு வருகிறார். ரஜித்தனா சந்தோச மிகுதியில் துள்ளினாள்.

இப்ப, எல்லோர் முகங்களிலும் சந்தோசம் அப்பி படர்ந்திருந்தது.

இன்று ஞாயிற்றுக்கிழமைதானே! எல்லாப் பத்திரிகைகளும் படித்து முடிக்க கொஞ்ச நேரமாயிடுத்து. அதுதான் தாமதம். தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்கிறேன் பிள்ளைகளே! வாத்தியாரப்பு முன்மொழிந்தார்.

கதை சொல்லுங்கோ கதை சொல்லுங்கோ. பிள்ளைகள் ஆரவாரம் செய்தனர்.

வாத்தியாரப்பு மென்மையாகச் சிரித்தார்.

இன்று நான், மதம் பற்றிய ஒரு கதையோடு வந்திருக்கிறேன். கவனமாகக் கேளுங்கள் பிள்ளைகள்.

வாத்தியாரப்பு கதை சொல்லத் தொடங்கினார்.

மதம் பிடித்த மனிதன் எப்பிடி எல்லாம் அழிந்து போகிறான் பாருங்கள். மனிதன் தனக்கொரு துன்பம் வரும்போது மட்டும் கடவுளை நினைக்கின்றான். துன்பத்திற்கு மேல் துன்பங்களால் துவளுகிறபோது கடவுளை சினக்கத்தொடங்குகிறான்.

கடவுள் என்று ஒருவன் இருக்கின்றானா? என்று மனிதன் கேட்கும்போது கடவுளுக்குச் சிரிப்பு வருகிறது!

மனிதன் என்று ஒருவன் இருக்கின்றானா? அவன் எங்கே இருக்கின்றான்? நளினமாய் எள்ளி நகையாடுகிறான் கடவுள்!

அந்தளவுக்கு அவரவர் நெஞ்சுக்குள் சுயநலங்களும் படாடோபங்களும் வியாபித்துக்கொள்ளுகின்றன. மனித தர்மங்கள் செத்து மடியத்தொடங்கியிருக்கின்றன.

தம் மதம்தான் பெரிதென்று காட்ட தன் உடல் வலிமையை ஆகுதியாக்கத் துணிகிறான்.

மத அபிமானம் யாருக்கும் எந்த மதத்தின் மீதும் இருக்கலாம். மனிதாபிமானம் இல்லாமல் போகுமானால் எந்த மதத்தை வழிபட்டும் யாருக்கும் பிரயோசனமும் இல்லை. இதற்குப் பொருத்தமான கதை ஒன்றை இன்று நான் சொல்லப்போகிறேன் கேளுங்கள் பிள்ளைகளே?

ஓர் ஊரிலே இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம், பௌத்த மதத்தவர்கள் மிகவும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தனர். அவர்கள் அனைவரினதும் பிரதான தொழில் விவசாயம் ஆகும். அவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைப் பார்த்து அயல் ஊரவர்களும் அவர்கள்போல் வாழப்பழகினர். அந்தளவுக்கு அந்த ஊரவர்களின் ஒற்றுமையான வாழ்க்கை முறமை அயல் ஊரவர்களுக்கும் முன்மாதிரியாக அமைந்திருந்தது.

ஒருமுறை அந்த ஊரில் நெல் விளைச்சல் அமோகமாக விளைந்திருந்தது. விளைந்த நெல்லினை விற்பதற்காகப் பக்கத்து ஊர்ச்சந்தைக்கு கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர்.

நான்கு மதத்தவர்களும் ஒற்றுமையாகச் சென்று கொண்டிருந்தபோது வழியில் இளைப்பாறுவதற்காக பெரிய ஆலமரங்கள் நிற்கிற ஒரு நிழலிலே ஒதுங்கி அமர்ந்தனர்.

யார் பின்பற்றும் மதம் உண்மையான மதம் என்ற வாதம் தொடங்கியது. இத்தனை காலங்களாக கேட்கப்படாத அப்படியொரு கேள்வியை ஒருவன் கேட்டுவிட்டான்.

இந்து மதமே உண்மையான மதம்! சிவபெருமானே எல்லா கடவுளர்க்கும் மேலானவர்! என்று இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவன் தன் வாதத்தை முன் வைத்தான்.

இல்லவே இல்லை! யேசுவே பெரியவர்! மனிதர்களோடு மனிதர்களாக வாழ்ந்தவர். துன்பப்பட்டவர்களுக்காக தானும் சேர்ந்து துன்பங்களை அனுபவித்தவர்! நல்வழி காட்டிய மகான் அவர்! என்று உரக்கச் சொன்னான் கிருஸ்த்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவன்.

அல்லாவை யாருமே மறந்துவிட மாட்டார்கள்! அல்லற்படும் ஏழைகளுக்காக அன்பு வழி அறவழி பற்றி எல்லாம் பிரபஞ்சம் எங்கும் புகட்டிய உத்தமர் அவர்! இப்படி, முஸ்லிம் மதத்தவன் ஒருவன் முழங்கினான்.

புத்தரை மறந்து நீங்கள் வீண் வார்த்தை பேசுகிறீர்கள்! புத்தரின் போதனைகள் உயர்தரமானவை! இன்றும் அவையே புனிதங்களாக மனித எண்ணங்களில் வளர்க்கப்படுகின்றன! இப்படிப் புத்தமதத்தவன் ஒருவன் சொன்னான்.

அவ்வளவுதான்...! சில நிமிடங்களுக்குள் கருத்து முரண்பாடு முற்றி அது பகையாக மாறத் தொடங்கியிருந்தது.

தங்கள் மதம்தான் உயர்ந்தது என்பதை நிலை நாட்டுவதற்காக ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளும் நிலைக்கு வந்திருந்தனர். ஒரே ஆலமர நிழலிலே ஒற்றுமையாக இருந்தவர்கள் நான்கு பரிவுகளாகப் பிரிந்து சென்றனர். ஒவ்வொரு மதத்தவரும் தங்களுக்கென்று ஓர் ஆலமர நிழலைத் தெரிவு செய்தனர். அதன்கீழே இளைப்பாறத் தொடங்கினர்.

அப்போது, அந்தவழியாக பெரியவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். ஓர் ஊரிலே ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் பகைமையோடு பிரிந்திருப்பதைக் கண்டார். ஒவ்வொருவர் முகங்களிலும் இருக்கும் கோபங்களைக் கண்டு விடயத்தைப் புரிந்து கொண்டார். விசாரித்து உண்மை நிலையினைத் தெளிவாக அறிந்தார்.

எது உண்மையான மதம் என்று உங்களுக்குத் தெரிய வேண்டும். அவ்வளவுதானே? என்று கேட்டார்.

ஆமாம் என்று எல்லோரும் ஒருமித்துப் பதில் சொன்னார்கள்.

நீங்கள் கொண்டு வந்திருக்கும் நெல்லினை விற்பதற்காகச் சந்தைக்கு எடுத்துச் செல்கிறீர்கள். அங்கு எந்த மதத்தவருடைய நெல் அதிக விலைக்குப் போகும்? இந்து மதத்தவருடையதா? கிறிஸ்தவ மதத்தவருடையதா? முஸ்லிம் மதத்தவருடையதா? பௌத்த மதத்தவருடையதா? என்று கேள்வி கேட்டார்.

யாருடைய நெல் தரமான நெல்லோ அதுவே அதிக விலைக்குப் போகும்! யார் நிலத்தில் நெல் விளைந்தது என்று பார்த்து யாரும் நெல் வாங்குவது இல்லை! என்று கூட்டத்தில் நின்ற ஒருவர் பதில் சொன்னார்.

அது போலவே கடவுளும், நீங்கள் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றுங்கள். யார் நல்ல வாழ்க்கை வாழ்கின்றாரோ அவரே கடவுளுக்கு மிகவும் வேண்டியவராக இருப்பார் என்று சொல்லி முடித்தார் பெரியவர்.

நல்லறிவு பெற்ற அவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தார்கள். ஒருவரையொருவர் ஆரத்தழுவி தங்கள் நட்பினைப் புதுப்பித்தனர். பெரியவரை வணங்கினர். முன்புபோல் ஒற்றுமையாக சந்தைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இந்துவே திரண்டு வா! என்றோ

கிறிஸ்தவனே கிளம்பி வா! என்றோ

இஸ்லாமியனே எழுந்து வா! என்றோ

பௌத்தனே பொங்கி வா! என்றோ எழுப்பக்கூடாது முழக்கம்.

மனிதனே இணைந்து வா!

மனிதனே மகிழ்ந்து வா! என்று முழங்கவேண்டும். இப்படித்தான் இனி மானுடத்தை மகத்துவப்படுத்துவோம் பிள்ளைகளே!

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார்.

மாணவர்கள் மிக உற்சாகத்துடன் எழுந்து போனார்கள். ஒற்றுமையின் வீரியம் அவர்கள் மனங்களில் விரிந்து படர்கின்றன.

4.

## பழமொழிகள் மருவிவிட்டன

டேய் வாத்தியாரப்பு வந்திட்டார் எடா. சத்தியன் சத்தமாகச் சொன்னான். எல்லோரும் வலு ஆவலோடு ஓடி வந்திருந்தார்கள்.

வாத்தியாரப்பு வாத்தியாரப்பு பழமொழி என்றால் என்ன? தீபிகா கேட்டாள்.

ஆ... கெட்டிக்காரத் தீபிகா. இப்படித்தான் கேள்விகள் கேட்க வேண்டும். பழமொழிகள் பற்றி இன்று சொல்லப்போகிறேன். கவனமாகக் கேளுங்கள் பிள்ளைகள்?"

பழமொழிகள் என்பவை பழங்கள்போல் இனிய சுவை தருபவை. அதாவது அவை கூறவரும் கருத்துக்கள் தத்துவார்த்தமானவை. அதைக் கேட்கவும், மற்றவர்களுக்கு எடுத்துரைக்கவும் இனிமையானவை.

பல கருத்துள்ள வசனங்களை வைத்து பேச்சு மொழியாக ஒரு விடயத்திற்கு விளக்கம் தருவதைக்காட்டிலும் அவ்வளவு அர்த்தங்களையும் சொல்லக்கூடிய மொழிகளாகவே பழமொழிகள் அமைகின்றன.

ஆனாலும், காலத்தின் நீட்சியாலும் வாய் வழியாகவும் பரிமாறப்பட்டு வருகின்றமையாலும் அனேக பழமொழிகள் திரிபுற்றிருப்பதையே நாம் காண்கிறோம்.

நான்கு பழமொழிகள் பற்றியும் அவை திரிபுபட்ட விதம் பற்றியும் உங்கள் எல்லோருக்கும் கூறுகிறேன் பிள்ளைகளே! கவனமாகக் கேளுங்கள்?

**(அ) அரசனை நம்பி புருசனைக் கைவிடாதே..!**

அந்தக் காலத்தில் கல்யாண தம்பதிகள் தங்களுக்கு நீண்ட காலங்களாக குழந்தை கிடைக்கவில்லை என்பதற்காக அரச மரத்தினைச் சுற்றி வழிபடுவார்களாம். குறிப்பாக பெண்கள் வழிபடுவார்களாம்.

தாவரங்கள் பகல் பொழுதுகளில் காபனீரொட்சைட்டை உட்சுவாசித்து ஒட்சினை வெளிவிடுபவை ஆகும். அதனால்தான் சுவாசத்திற்கான பெருமளவு ஒட்சிசனை தாவரத்திலிருந்து நாம் பெறுகிறோம். இதுவே மனித உடல் நலத்திற்கு பாதுகாப்பானவையும் ஆரோக்கியமானவையும் ஆகும். அதிலும் அரசமரம், தருகின்ற ஒட்சிசன்கள் தூய்மையானவை! மருத்துவ குணங்கள் கொண்டவை! அவை பெண்ணின் உடல் கலங்களுக்குள் போய் சேருகின்றபோது, கருத்தங்கலைச் தடை செய்கிற கொழுப்புப்

பதார்த்தங்களையும் வேறுசில கட்டிகளையும் அழித்து விடுமாம். அத்தோடு உடலின் ஒருசீர்த்தன்மையையும் தோற்றுவிக்க கருத்தங்கல் இலகுவாகிவிடுமாம்.

இத்தகைய சிறப்பியல்பு ஆலமரங்களுக்கும் இருக்கின்றனவாம்.

அரச மரத்தினைச் சுற்றி வழிபட்டால் மட்டும் போதாது கணவனின் அன்பான அரவணைப்பும் கிடைக்க வேண்டும். அப்போதுதான் நீண்ட காலங்களாக குழந்தைப்பேறில்லாத ஒரு குடும்பப்பெண் கருத்தரிப்பாள். விஞ்ஞானம் சார்ந்து தோற்றுவிக்கப்பட்டதாக இந்த பழமொழி காணப்படுகின்றது.

ஆகவே ஒருபெண் தாய்மை அடைவதற்கு அரசினை (அரசமரத்தினை) மட்டும் நம்பியிருக்காமல் தன் புருசனையும் கைவிடாது இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்தப் பழமொழி தோற்றம் பெற்றிருக்கிறது.

அதாவது, அரசினை நம்பி புருசனைக் கைவிடாதே! என்பதுதான் காலவோட்டத்தில் அரசனை நம்பி புருசனைக் கைவிடாதே! என்று மருவி வந்திருக்கிறது பிள்ளைகளே...?
மிக நன்றாகச் சொன்னீர்கள் வாத்தியரப்பு. மற்றைய பழமொழிகள் பற்றியும் கேட்க ஆவலாக இருக்கிறோம் வித்தியன் சொன்னான்.

சரி சரி சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். தண்ணிர் குடித்துவிட்டு வருகிறேன் என்றார்.

எங்களுக்கும் தாகமாக இருக்கிறது வாத்தியாரப்பு. நாங்களும் வருகிறோம் என்று சொல்லி வாத்த்தியாரப்புக்கு பின்னாலேயே போனார்கள்.

பக்கத்துக் கிணற்றிலே தண்ணீர் எடுத்து குடித்துவிட்டு வந்து அமர்ந்தார்கள்.

வாத்தியாரப்பு மீண்டும் பழமொழிகள் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

## (ஆ) கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசம்..!

கழு என்பது ஒரு வகையான கோரைப்புல் ஆகும். அந்தப் புல்லினால் தைக்கப்படும் பாயில் படுத்துறங்கும்போது நாசியில் கற்பூரவாசம் வீசுமாம்! கடந்த சில காலங்களிற்கு முன்பு இவ்வகையான பாய்களைப் பெரும்பாலானவர்கள் பயன்படுத்தி வந்திருப்பதை கண்டிருக்கிறோம்.

அந்தப்பாயில் படுத்துறங்கும்போது அவை மனித உடலுக்கு குளிர்ச்சியினை தோற்றுவிப்பதோடு ஒரு வகையான சுகத்தையும் தருவதுண்டு. குழந்தைகளை அந்தப்பாயில் தூங்க வைத்தால் பூச்சிகள் எதுவும் கிட்ட அணுகுவதில்லையாம்.

கழு என்கிற கோரைப்புல்லினால் தைத்தபாய் உடலுக்கு மட்டுமில்லை உள்ளத்திற்கும் சுகத்தைக் கொடுக்கிறது என்பதுதான் உண்மை.

ஆகவே கழு தைக்கத் தெரியுமாம் கற்பூர வாசம்! என்ற பழமொழியில் கழு என்ற சொல்லும் தைக்க என்ற சொல்லும் பிரிந்திருப்பதை அவதானியுங்கள். இந்த இரு சொற்களையும் இணைக்கிறபோது கழுதைக்க என்ற சொல்லாக உருவாகி கால நீட்சியில் கழுதைக்கு என்று மருவி வந்திருக்கிறது. என்று வாத்தியாரப்பு சொன்னபோது இனியவன் துள்ளிக் குதித்தான்.

கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசம்? கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசம்? என்று சொல்லி பாட்டுப் பாடினான்.

இனியவனின் குறும்பு பார்த்து மற்றைய மாணவர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

வாத்தியாரப்பு புன்னகைத்தபடி இனியவனின் சொக்கினை கிள்ளினார்.

**(இ) மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே!**

பிள்ளைகளே மண்குதிரையை எங்கேயாவது நீங்கள் பார்த்ததுண்டா? வாத்தியாரப்பு கேட்டார்.

இல்லை இல்லை என்று சத்திமிட்டுச் சொன்னார்கள்.

அதுபோலத்தான் இந்தப்பழமொழி உச்சரிப்பிலும் தவறிருக்கிறது என்றார்.

விளக்கமாச் சொல்லுங்கள் வாத்தியாரப்பு சந்தோஸ் கேட்டான்.

மண்குதிர் என்றால் மண்பிட்டி என்றுதான் அதற்குப் பொருள் உண்டு.

ஆற்றிலே மீன் பிடிக்கச் சென்ற ஒருவன் கரையில் நின்று பார்த்தபோது அங்கே ஒரு தூரத்தில் மண்பிட்டி (மண்குதிர்) தெரிந்திருக்கிறது. ஆகவே அந்த இடத்தில் நின்று மீன் பிடிக்கலாம்! அது நல்ல வசதியாக இருக்குமென்று நம்பி அதை நோக்கி நடந்து சென்றானாம். அவன் அப்படிப் போய்க்கொண்டிருக்கும் போதே அற்றுநீர் அலை அடித்தடித்து அந்த மண்குதிர் கரைந்து விட்டதாம். இதைப் பார்த்து அவன் ஏமாற்றத்தோடு கரை வந்து சேர்ந்தானாம்.

மண்குதிர் ஐ நம்பி ஆற்றில் இறங்காதே! என்ற பழமொழிதான் மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே! என்று மருவி வந்திருக்கிறது பிள்ளைகளே! என்று வாத்தியாரப்பு சொல்லும்போது ஒவ்வொருவரும் ஆளையாள் பார்த்து வியந்தனர்.

## (ஈ) ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது

பிள்ளைகளே சுரைக்காய் பார்த்திருக்கிறீர்களா?

ஓம்....! ஓம்.....! என்றனர் பிள்ளைகள்.

சுரைக்காயின் சதைப்பகுதியை சிறுசிறு துண்டுகளாய் நறுக்கி சாம்பாரிலிட்டு சாப்பிட்டு வரவேண்டும்.

அப்போதுதான் நீரிழிவு நோயினால் வருகிற தாகம் மற்றும் உடல் எடை குறைதல் போன்றவற்றை இது தீர்த்து வைத்துவிடுமாம்.

ஏட்டுச்சுரைக்காயை பார்த்துண்டா?

அப்படி என்றால் என்ன? வாத்தியாரப்பு. இனியவன் கேள்வி கேட்டான்.

ஏட்டிலே வரைந்த சுரைக்காய் அப்படித்தானே! வாத்தியாரப்பு? வித்தியன் கேட்டான்.

கெட்டிக்காரன், வித்தியன் சொன்னது சரி. வாத்தியாரப்பு முன்மொழிந்தார்.

எல்லோரும் கைகள் தட்டி ஆரவாரம் செய்தனர். வித்தியனுக்கும் வலு உற்சாகம் பிறந்து வந்தது. அவன் முகத்தை அவதானித்தார் வாத்தியரப்பு.

ஏட்டிலே வரைந்த சுரைக்காயில் கறி ஆக்கமுடியுமா?

இல்லை....! இல்லை....!. என்றனர் பிள்ளைகள்.

ஏட்டுச்சுரைக்காய் மட்டுமில்லை, வாழைக்காய், பாவற்காய், வெண்டைக்காய் என்று எந்தவொரு காயையும் ஏட்டிலே வரைந்துவிட்டு அதை வெட்டி கறி சமைக்க முடியாது.

ஏட்டிலே வரைந்த சுரைக்காய் போலவே மனிதர்கள் சிலர் யாருக்கும் பிரயோசனம் இல்லாமல் வாழ்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. வாத்தியாரப்பு சொல்லி முடித்தார்.

இன்று நேரம் போனதே தெரியவில்லை. எல்லோரும் ஒருமித்து சொன்னார்கள்.

உங்கள் எல்லோரையும் வீடுகளில் தேடப்போகிறார்கள். போயிட்டு நாளை வாருங்கள் பிள்ளைகளே! எழுந்து நடக்கத் தொடங்கினார் வாத்தியாரப்பு.

*5*

## ஏன் இந்த பேதம்!?

இன்று பிள்ளைகளோடு கதை கேட்கவென்று ஓரளவு வயதானவர்களும் வந்திருந்தனர். ஆண்கள் பெண்கள் என்று இணைந்திருந்தனர். இப்படி கூட்டம் கூடியிருப்பதைப் பார்த்த வாத்தியாரப்புக்கு இன்னும் ஊசார் வந்தது.

பிள்ளைகளே இன்று நான் சொல்லப்போகிற கதை உங்கள் எதிர்காலத்திற்கு பொருத்தமான கதை. ஆகவே, சத்தம்போடாமல் இருந்து கவனியுங்கோ

கதை சொல்லத் தொடங்கினார் வாத்தியாரப்பு.

பொதுவாக ஆண்கள் சுயநலமாக வாழவே கற்றிருக்கிறார்கள். ஏதோ தாங்கள்தான் ஜெயிக்கப் பிறந்தவர்கள் போலவும்! தாங்கள்தான் கடவுளின் முதல் குழந்தைகள் போலவும்! என நினைத்து செயற்படுகிறார்கள்.

சிவபெருமானின் அர்த்தநாரீஸ்வரர் தோற்றம் ஆண் பெண் இருபாலாரும் சம அந்தஸ்துடையவர்கள் என்பதைக் காட்டுவதாகவே புராணம் கூறுகின்றது.

ஆனாலும், பெண்களை தங்கள் கைகளில் ஆடும் பொம்மைகளாவே பலர் கருதுகின்றனர்.

எல்லா ஆண்களையும் சொல்லவில்லை. எல்லா பெண்களுக்காகவும் இது சொல்லவில்லை.

ஆணாதிக்கத்தின் வீச்சத்தையும் சுயபச்சாதாப எண்ணங்களையும் காட்டும் விதமாகவே சீதனம் வாங்கும் முறமையை யாரும் கருதலாம். தங்கள் ஆண்பிள்ளைகளுக்கு சீதனம் வாங்குவது என்பது தங்கள் குடும்பத்திற்கும் தனக்கும் கிடைக்கக் கூடிய அந்தஸ்த்தாகவே படித்தவர் முதல் பாமரர் வரை கருதுகின்றனர்.

ஓர் ஆண் பல்கலைக்கழகம் சென்று படித்துப் பட்டதாரியாக இருந்து விட்டால் அது உலகத்தில் உள்ளவற்றிலும் மிக உன்னத அந்தஸ்தாக ஆண்கள் கருதுகின்றனர்.

பல்கலைகழகப் படிப்பு முடித்து வெளியேறிய அடுத்த சில நாட்களிலோ அல்லது சில மாதங்களிலோ அரச வேலை கிடைத்து விட்டால் அவனின் வக்கிர நடத்தைகளை வார்த்தைகளில் சொல்ல முடியாது.

இப்படியான இயல்புகள் நிறைந்த ஒருவனை பணவசதி படைத்த ஒருவர் தன் மகளுக்கு வரனாகக் கேட்டுவந்தார். மாப்பிள்ளயையின் தகப்பனாரின் பிடிச்சுராவும் குணத்தை நன்கு அறிந்திருந்த அவர், மாப்பிள்ளையின் பட்டம் பதவியை நினைத்து அவர்

கேட்ட அத்தனையையும் சீதனமாகக் கொடுத்தார். தன் மகளின் இனிய கல்யாணம் பார்த்து சந்தோசமானார்.

மாப்பிள்ளைக்கும் வலு சந்தோசம். தன் நண்பர்கள் மத்தியில் தன்னை பெருமையாக பிதற்றிக்கொண்டு திரிந்தான். இவனின் வக்கிர வார்த்தைகள் கேட்ட நண்பர்களும் முகம் சுளித்து விலகி நடக்க ஆரம்பித்தனர்.

சில காலங்களிலே அவள் கர்ப்பிணியானாள். நிறைமாத கர்பிணியான அவள் அக்கம் பக்கத்தினரால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அவளின் கணவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அலுவலக வேலையை இடையில் நிறுத்தி, விசேட விடுமுறை எடுத்து வேகவேகமாக கோவிலுக்கு ஓடிப்போனான். இறைவனிடம் கைகள்கூப்பி வேண்டினான்.

இறைவன் அவன் முன் தோன்றி

உன் பிரார்த்தனை என்னவென்று என்னிடம் சொல் நான் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால், அதற்கு கைமாறாக நான் சொல்வதை நீ கேட்க வேண்டும். என்றார் இறைவன்.

இறைவனின் கட்டளையை ஏற்றுக்கொண்ட அவன் தன் வேண்டுதலை இறைவனிடம் கூறினான்.

என் மனைவிக்கு ஆண் குழந்தையே பிறக்க வேண்டும்! பெண் குழந்தை வேண்டவே வேண்டாம் என்றான் அவன்.

அவ்விதமே இறைவனும் அவனின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார்.

உங்களது வேண்டுகோள் என்னவென்று கூறுங்கள் இறைவா..? என்று அவன் இறைவனிடம் கேட்டான்.

எனது வேண்டுதல் என்ன என்பதை காலம் வரும்பொழுது கேட்கிறேன். என்று சொன்னார் இறைவன்.

சுமார் இருபத்தைந்து வருடங்கள் கழித்து அவனின் கனவில் இறைவன் தோன்றினார்.

என் வேண்டுதலை நீ நிறைவேற்றும் காலம் நெருங்கி விட்டது. அதை நீ கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்று இறைவன் கேட்டார்.

தான் முன்னரே வாக்குறுதியளித்ததன் பிரகாரம் நிறைவேற்றுகிறேன் இறைவா! உங்கள் வேண்டுதல் என்னவென்று கூறுங்கள்? என்று கேட்டான் அந்த பேராசைக்கார மனிதன்.

உன் மகனின் திருமணத்தின்போது பெண் வீட்டாரிடம் இருந்து எந்த வரதட்சனையும் நீ கேட்கக் கூடாது! அந்த பெண்ணுக்கு வரதட்சணை கொடுத்து உன் மருமகளாக ஏற்றுகொள்ள வேண்டும் என்றார் இறைவன்.

இதை கேட்டு அதிர்ந்து போய் நின்றான் அந்த பேராசைக்காரன்.

பெண்பிள்ளை பிறந்தால் மாப்பிள்ளைக்கு வரதட்சணை தரவேண்டுமே என்று நினைத்துத்தானே உன்னிடம் ஆண் பிள்ளை வரம் கேட்டேன் நான். கேட்டதுபோல் ஆண் பிள்ளையை கொடுத்து விட்டு இப்படி ஒரு பாரத்தை என் தலையில் சுமத்துகிறாயே இறைவா! என்று கதறினான் அந்தப் பேராசைக்கார மனிதன்.

இறைவன் தனக்குள்ளே சிரித்து விட்டுச் சொன்னார்

நீ வணங்க பெண்தெய்வம் வேண்டும்! அவள்தான் உன் சக்தி!

உன்னை சுமக்க ஒரு பெண் வேண்டும்! அவள்தான் உன் தாய்!

நீ திருமணம் செய்யவும் உன்னை அரவணைக்கவும் உன்னை நினைத்தே உருகவும் உனக்கான வீட்டுப்பணிகள் செய்யவும் ஒரு பெண் வேண்டும்!

இப்படியான குணங்களைக் கொண்டவள்தான் உன் மனைவி!

இப்ப, உன் மகனுக்கு திருமணம் செய்து வைக்க ஒரு பெண் வேண்டும்! அவள்தான் உன் மருமகள்.

உன் வாழ்க்கையில் பங்கு கொண்ட இத்தனை பெண்களும் உனக்கு பாரமாக தெரியவில்லையா? ஆனால், ஒன்றுமே அறியாத பெண் சிசு மட்டும் எப்படி பாரமானது உனக்கு..? இப்படி ஒரு கேள்வியினை இறைவன் கேட்டார்.

அவன் மௌனமாக நின்றான். இறைவன் தொடர்ந்தார்...!

நீ எவ்வளவு வரதட்சணை கேட்டாலும் பெண்ணை பெற்றவர்கள் உனக்குத் தரவேண்டும்! ஆனால், உன்னிடம் யாருமே வரதட்சணை கேட்கக்கூடாது என்று நீ நினைப்பது எந்த விதத்தில் நியாயம்..? வரதட்சணை கேட்பதை நிறுத்தினாலே போதும்....! பெண்பிள்ளை என்பவள் பாரமாகத் தெரியவே தெரியமாட்டாள்! என்று புத்தியில் உறைக்கும்படி சொன்ன இறைவன் அடுத்த கணமே மறைந்து விட்டார்.

முதுமானிப்பட்டமோ அல்லது கலாநிதிப் பட்டமோ? பெற்றிருந்தும் அவன் புத்திக்குள் புகுந்திராத இவை எல்லாம், இறைவனின் புத்திமதிகளால் அவன்

நெகிழ்ந்து போய் நின்றான். தன்னை நினைத்து வெட்கப்பட்டான். கண்ணீர் மல்கி அழுதான். மனிதனாக வாழும் கலை அறிந்து மகிழ்ந்தவன் ஆனான்.

வறுமையில் வாடும் ஒரு நல்லகுடும்பத்தில் பெண் எடுத்து தன் மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்தான் அவன். மகன் மிக சந்தோசமாகவே வாழ்ந்தான். தன் மகனின் இனிய வாழ்வு பார்த்து மனம் பூரிப்படைந்தான். அன்றிலிருந்து அவன் எண்ணங்களில் சந்தோசங்களே பூச்சரங்களாத் தொடர்ந்து கொண்டன.

வாத்தியரப்பு கதை சொல்லி முடித்துவிட்டார்.

சுயநல ஆசையின் விளைவு அபரீதமானது என்பதை அறிந்து மனத்தெளிவோடு சென்றுகொண்டிருந்தனர்.

## 6.
## சிந்தனை தோன்றி அறிவு வளர்ந்தது.

இன்று வாத்தியாரப்புவின் வீடுதேடி பிள்ளைகள் வந்திருந்தார்கள். வாத்தியாரப்புவிற்குச் சின்னதாக உடல் நலமில்லையாம். அதை அறிந்து இங்கே வந்திருந்தனர். கட்டிலில் கால் நீட்டி படுத்திருந்த வாத்தியாரப்பு எழுந்திருந்தார். பிள்ளைகளின் வரவு பார்த்து மனப்பூரிப்படைந்தார்.

எப்பிடி வாத்தியாரப்பு உடல்நிலை சுகமாகி விட்டதா? தீபிகா கேட்டாள்.

ஓம்..! ஓம்..! நல்ல சுகம். மிக்க சந்தோசம் பிள்ளைகளே!

வாத்தியாரப்பு எழுந்து சென்று கை கால்கள் கழுவிவிட்டு வந்தமர்ந்தார். அவர் வீட்டிலே படுத்திருக்கும் அறைக்கு பக்கமாக ஒரு கொட்டில் இருந்தது. அது, பெரிய வகுப்புப் பிள்ளைகள் படிக்க வருகிற வகுப்புக்கொட்டில். அங்கே, நீண்டபெரிய கரும்பலகை ஒன்றும் இருந்தது. இப்ப பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வாத்தியாரப்பு வகுப்பு கொட்டிலுக்குப் போனார்.

வாத்தியாரப்பு கரும்பலகையில் உரோமன் இலக்கத்தில் ஒன்பதை எழுதினார்.

இதில் எங்கேயாவது ஒரேஒரு கோடு மட்டும் சேர்த்து இந்த ஒன்பதை ஆறாக மாற்றுங்கள் பிள்ளைகள்..? என்று கேள்வி கேட்டார்.

அதற்கான விடையினை முதலில் பெற்றுவிடும் அவாவில், மாணவர்கள் கடுமையாகப் போராடினர். ஒன்பதை எப்படி ஆறாக மாற்றுவது?

ஒன்பது என்ற உரோமன் இலக்கத்தை கரும்பலகையில் வரிசையாக நின்று எல்லோரும்

எழுதினார்கள். எல்லோர் கைகளிலும் சோக்குத்துண்டு இருந்தது.

வாத்தியாரப்பு எழுதிய அந்த உரோமன் இலக்கத்தையே தாங்களும் பார்த்து எழுதினார்கள். பிறகு, அதன் குறுக்காகவும், நெடுக்காகவும், சரிவாகவும் என்று மாறிமாறி ஒவ்வொரு கோடாக சேர்த்துப் பார்த்தார்த்தனர்.

ஒன்பது ஆறாக வருவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லவே இல்லை.

மாணவர்கள் எல்லோரும் சோர்ந்து போய் இருந்து விட்டனர்.

என்னால இனி முடியவே முடியாது வாத்தியாரப்பு. மகிழ்நன் சொன்னான்.

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் அப்படித்தான் சொன்னார்கள்.

மாணவர்களே கட்டாயம் இதை செய்துகாட்ட உங்களால் முடியும். அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது. இன்னும் முயற்சி செய்யுங்கள்.

மாணவர்களின் சிந்தனைகளுக்கு உற்சாகம் செய்தார் வாத்தியாரப்பு.

மாணவர்கள் எல்லோரும், எங்களால் இனி முடியாது வாத்தியாரப்பு. என்று ஏகமானதான முடிவினைத் தெரிவித்தனர்.

வாத்தியாருக்கு இலோசாக சிரிப்பு வந்தது. உற்சாக மிகுதியால் மாணவர்களும் கதிரையின் விளிம்புக்கு வந்திருந்தனர். அவர்களின் ஆவலும் அவசரமும் ஒவ்வொருவர் முகங்களிலும் அப்பித்தெரிகின்றன.

வாத்தியாரப்பு சொல்லும் விடைக்காகத் தவம் இருந்தனர். மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொண்டுவர விரும்பிய வாத்தியாரப்பு சிந்தனையின் ஒருபடியினை தானே எடுத்துக்கொடுத்தார். உற்சாகம் செய்தார்.

மாணவர்களே கோடு என்றவுடன் உங்கள் எல்லோர் மனதிலும் நேர்கோடு மாத்திரமே மனதில் துருத்தி வந்திருக்கிறது. வளைகோடு, முறிகோடு இவைகளில் ஏதாவதும் பயன்படுத்தலாம் அல்லவா..? என்று சொன்ன மாத்திரத்திலேயே வித்தியன் படாரென எழுந்து நின்றான்.

சேர் ix என்ற உரோமன் இலக்கத்திற்கு முதல் எழுத்தாக s என்ற வளைகோட்டினை சேர்த்தால் six என்ற ஆங்கிலச் சொல் கிடைக்கிறது. ஆகவே, ஆறு சரிதானே வாத்தியாரப்பு? என்று பதில் சொல்லி அசத்தி நின்றான்.

பிள்ளைகளே! இதுவரையும் பிரமிப்பாகவும் புதிராகவும் இருந்த கேள்விக்கான விடையினை கண்டுபிடித்து விட்டீர்களல்லவா? அதனால், உங்கள் உள்ளம் சந்தோசமடைவதை காணுகிறேன். என்னுள்ளத்திலும் ஓர் உற்சாகம் வருகிறது. நீங்கள் உண்மையில் திறமையானவர்கள். அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன்.

ஆசிரியர் என்பவர் தன் மாணவர்களின் சிந்தனை ஆற்றல்களை வளப்படுத்துனராகவே இருக்க வேண்டும். எடுத்தவுடனேயே எதற்கான பதிலையும் ஆசிரியர் சொல்லி விடுவதல் என்பது உரித்த பழங்களைச் சாப்பிடும் சோம்பேறிச் செயலையே அது குறிக்கும்.

சித்தனையோடு ஆற்றல்களை வளர்க்கவே உங்களிடம் சில கேள்விகள் நானும் கேட்டேன். அதனால், நீங்கள் உற்சாகமாகவும் ஆவர்வமாகவும் இருந்ததை நானும் அவதானித்தேன்.

வாத்தியாரப்பு இப்படி சொன்னபோது பிள்ளைகள் எல்லோருக்கும் குதூகலமாகவும் ஆர்வமாகவும் இருந்தனர்.

வாத்தியாரப்புவின் மனைவி நாகம்மா ஆச்சி பால்தேநீர் கொண்டுவந்து கொடுக்கிறார். எல்லோரும் சுவைத்துக் குடிக்கின்றனர்.

## 7.

## ஒருவர் பிறந்த தேதிக்கான கிழமையினைக் கண்டுபிடித்தல்

இன்றும் வாத்தியாரப்பு வீட்டிலேதான் இருந்தார். மாலையானதும் வாத்தியாரப்புவை தேடி பிள்ளைகள் வந்து சேரவும் வாத்தியாரப்பு வரவும் நேரம் சரியாக இருந்தது.

வாத்தியாரப்பு இண்டைக்கு உங்கள் உடல்நிலை எப்படி? நல்ல சுகமாகி விட்டதா? ரஜித்தனா கேட்டாள்.

ஓம்…ஓம்… ஓரளவு சுகம். நன்றி பிள்ளைகள்.

ஒருவருடைய பிறந்ததினத்தை வைத்து அவர் என்ன கிழமையில் பிறந்தவர் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு சூத்திரமும் அதற்கான அட்டவணையும் இருக்கிறது பிள்ளைகளே! அதுபற்றி இன்று கொஞ்சம் சொல்லப்போகிறேன். எல்லோரும் ஆயத்தமா? என்று ஒரு கேள்வியும் கேட்டார்.

நான் நினைக்கின்றேன் 1988 ஆம் ஆண்டில் எட்டாம் தர மாணவர்களுக்கான ஆங்கில புத்தகத்தில் இப்படியொரு அட்டவணை இருந்ததையும் அதுபற்றி தெளிவாக கற்றதும் இப்பவும் என் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஆனால், அந்த அட்டவணையில் 1999 ஆம் ஆண்டு வரையான குறிப்பிட்ட தினங்களுக்கான கிழமைகளைக் கண்டு பிடித்தல் முறையே இருந்திருக்கிறது. இன்று நான் சொல்ல போகிற விடயம் 10000 வருடம் வரையான ஒரு நாட்காட்டியினையே ஆகும்.

இதற்கான பொதுவான சூத்திரம் இதுதான் பாருங்கோ என்று சொல்லி

$$\frac{D+M+Y+Y/4}{7}$$

எனும் சூத்திரத்தை கரும்பலகையில் எழுதினார். இங்கே

D என்பது திகதியையும்

M என்பது குறித்த மாத்திற்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள எண்ணினையும்

Y என்பது குறித்த வருடத்தின் இறுதி இரு இலக்கங்களையும்

Y/4 என்பது குறித்த வருடத்தின் இறுதி இரு இலக்கங்களை 4 ஆல் வகுக்கும்போது வரும் ஈவினையும் குறிக்கிறது. இதில் வரும் மீதியை அப்பிடியே விட்டு விடுங்கள்

இதோ அந்த அட்டவணை பாருங்கள்.

| மாதத்திற்கான எண்கள் | | | கிழமைக்கான எண்கள் | |
|---|---|---|---|---|
| மாதம் | எண் | | 2000 இற்கு முன்பு | 2000 உம் 2000 இற்கு பின்பும் |
| | | கிழமை | வகை–I | வகை–II |
| 1. தை | 1/0* | ஞாயிறு | 1 | 2 |
| 2. மாசி | 4/3* | திங்கள் | 2 | 3 |
| 3. பங்குனி | 4 | செவ்வாய் | 3 | 4 |
| 4. சித்திரை | 0 | புதன் | 4 | 5 |
| 5. வைகாசி | 2 | வியாழன் | 5 | 6 |
| 6. ஆனி | 5 | வெள்ளி | 6 | 0 |
| 7. ஆடி | 0 | சனி | 0 | 1 |
| 8. ஆவணி | 3 | | | |
| 9. புரட்டாதி | 6 | | | |
| 10. ஐப்பசி | 1 | | | |
| 11. கார்த்திகை | 4 | | | |
| 12. மார்கழி | 6 | | | |

பிள்ளைகளே, இங்கே முக்கியமாக ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். அதாவது, லீப் வருடமாகஇருந்தால் தை மாதத்திற்கு 0 என்றும் மாசி மாதத்திற்கு 3 என்றும் சேர்த்துக் கொள்ளவேண்டும் சரியா?

ஓம்...! ஓம்...! ஆவலில் ஒருமித்துச் சொன்னார்கள்.

உதாரணமாக 28.01.2014 என்ற தினத்தை எடுத்தால்

$$= \frac{28+1+14+3}{7}$$

$$= \frac{46}{7}$$ என அமைகிறதல்லவா?

இங்கே, 46 என்பதை 7 ஆல் வகுக்கும்போது 6 ஈவாகவும் 4 மீதமாகவும் கிடைக்கிறதல்லவா? அட்டவணையில் 4 என்பதற்கு செவ்வாய்க்கிழமை என்பது தெளிவாகிறது.

உடனடியாகவே, ரஜித்தனா தன் பிறந்ததினத்தை கரும்பலகையில் எழுதிப் பார்த்தாள். அவளோடு தீபிகாவும் சேர்ந்து நின்று எழுதினாள்.

நாகம்மாஆச்சி, பிள்ளைகளுக்கு பால்தேநீரோடு எள்ளுப்பாகுவும் கொண்டுவந்து தருகிறார். எல்லோரும் சுவைத்துக் குடிக்கின்றனர்.

## 8.

## போராடுபவர்க்கே வாழ்க்கை சொந்தம்

மாணவர்களே..! நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள். உங்களுக்கான ஒரு சந்தர்ப்பம் கை நழுவிப் போகிறது என்றால், அதன் அர்த்தம் நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள் என்றோ? வாழ்க்கையில் ஏதோ அவமானமடைந்து விட்டீர்கள் என்றோ? அர்த்தம் கொள்ளவேண்டாம்.

ஒரு சந்தர்ப்பம் கை நழுவிப்போகிறது என்றால் இன்னொரு சந்தர்ப்பம் உங்களுக்காகக் காத்திருக்கிறது என்றுதான் அர்த்தம். அந்தச் சந்தர்ப்பத்தை நோக்கி நீங்கள் பயணிக்க வேண்டும். சந்தர்ப்பம் உங்களைத் தேடிவராது.

இப்படியான பயணத்தின்போது பல இடைஞ்சல்களும் இன்னல்களும் வந்து கொண்டே இருக்கும். அதற்காகச் சோர்ந்து விடத்தேவையில்லை. போராடுபவர்க்கே வாழ்க்கை சொந்தமாகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கதையைக் கூறுகிறேன் கேழுங்கள் மாணவர்களே..! என்று சொல்லி வாத்தியாரப்பு கதை சொல்லத்தொடங்கினார்.

கொல்கத்தா தொடரூர்தி நிலையத்தினுள் ஒரு தொடரூர்தி நுளைகிறது. மனது முழுவதும் ஏக்கம்

கலந்த எதிர்பார்ப்புடன் அந்த தொடர் ஊர்தியிலிருந்து இறங்கினான் ஓர் இளைஞன்.

அடுத்தமுறை ஊருக்குத் திரும்புவதற்காக இதே தொடரூர்தி நிலையத்திற்கு வரும்போது ஒரு நிரந்தரமான வேலையில் சேர்ந்திருக்க வேண்டுமென மனதிற்குள்ளே சபதம் எடுத்திருந்தான் அவன்.

கொல்கத்தாவிற்கு வந்த அவன், சின்னச்சின்ன கூலித்தொழில் செய்தான். தனது நண்பர்கள் தங்கியிருந்த சிறிய அறையில் தங்கியிருந்தான் அந்த இளைஞன். ஏற்கனவே அந்த அறையில் நான்குபேர் இருந்தார்கள். இவன் ஐந்தாவது நபராக இணைந்திருக்கிறான். அந்தச் சின்னஞ்சிறிய அறையில் ஆறடி மூன்று அங்குலம் உயரமுள்ள இவனால் கால்களை நீட்டி, அசைந்து படுக்கக்கூட முடியவில்லை. சமாளித்தபடி தூங்கிவிடுவான்.

அங்கிருந்த நண்பர்களின் ஆதரவும், பரிவும் இவனுக்கு நல்ல ஆறுதலைக் கொடுத்திருந்தன. சில காலங்களிலேயே வேலை தேடும் படலத்தை தொடங்கினான்.

மூன்று மாதங்கள் ஓடியதுதான் மிச்சம். நிறுவனங்களின் வெளியே நிற்கும் பாதுகாப்பு நபரைத்தாண்டி போவதே அவனுக்கு பெரிய பாடாக இருந்தது.

எல்லா இடங்களிலும் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக பலத்த அவமானங்களோடு திரும்பினான்.

எத்தனை நாள்தான் நண்பர்களின் உழைப்பில் வயிற்றைக் கழுவுவது? நண்பர்களோ சிறுசிறு வேலைகள் செய்து பிழைப்பவர்கள். அவர்களின் கஸ்டத்தில் வெறுமையான என் இருப்பும் அவர்களுக்குக் கஸ்ரமாகாதா..? ஊருக்கே திரும்பிவிடலாம்! நான் ஒரு அதிஸ்ரம் கெட்டவன்! இது எவ்வளவு பெரிய நகரம்! இங்கெல்லாம் என்னையா கவனிக்கப் போகிறார்கள்? எனப் பெரும் கவலைகளுடன் கண்ணீர் சொரிய பல இராத்திரிகளில் அவன் அழுதிருக்கிறான்.

இருந்தபோதிலும் இத்தனை பேருக்கு வாழ்வு கொடுத்த இந்த மாநகரம் எனக்கும் ஒரு வேலை கொடுக்காமலா போகப்போகிறது என எண்ணி நம்பிக்கையுடன் இருந்தான்.

ஒருநாள் இந்திய ரேடியோ அறிவிப்பாளர் பணிக்கு விண்ணப்பங்கள் தேவை என்ற பத்திரிகை விளம்பரம் பார்த்து அந்தப் பதவிக்காக விண்ணப்பித்திருந்தான்.

இன்று வந்துவிடுமா? நாளை வந்து விடுமா? என்று தபால்காரர் வரும் திசையைப் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.

இரண்டு வாரங்கள் கழித்து நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வந்திருந்தது. அன்று அந்த அறையில் உற்சாகம் பொங்கி வழிந்தது. நேர்முக அழைப்பு வந்ததிற்கே நண்பர்கள் தேநீர் உபசாரம் கொடுத்துக் கொண்டாடினார்கள்.

தங்கள் நண்பன் வானொலியில் செய்தி வாசிப்பதை கற்பனை செய்து மகிழ்ந்தார்கள்.

அடுத்தநாள், நேர்முகத் தேர்விலே தன் முறைக்காகக் காத்திருந்தான் அந்த இளைஞன்.

ஒவ்வொருவராக உள்ளே சென்று கொண்டிருந்தனர். செய்திகளை மனதினுள்ளே வாசித்து மனப்பாடம் செய்தான். பல வினோதமான விளம்பரங்களை பல வகைகளில் சொல்லிப் பார்த்துக்கொண்டிருந்தான். அடிக்கடி தொண்டையைச் செருமிக்கொண்டான்.

அவன் பெயர் கூப்பிடப்பட உள்ளே செல்கிறான். அவன் உள்ளம் பதட்டம் அடைகிறது. தொண்டை கரகரக்கிறதுபோல் இருப்பதை உணர்கிறான். இருந்தும் தன் உயர்ந்த உருவத்தை இன்னும் உயர்த்திக் காட்டுவதுபோல் நெஞ்சு நிமிர்த்தி உள்ளே சென்று கொண்டிருந்தான்.

அவன் உணர்வெல்லாம் நம்பிக்கையால் நிரம்பி வழிந்தது. நம்பிக்கைப் பிரவாகம் கட்டவிழ்ந்தது போல் அங்கே நடந்த குரல் தேர்வில் கர்ஜித்தான். விதவிதமான நிகழ்ச்சிகளைத் தொகுத்துக்காட்டினான்.

நல்லது வெளியே காத்திருங்கள் முடிவினை அறிவிக்கிறோம். என்றனர் நிலையத்தினர்.

காலையில் இருந்து மாலை வரை காத்திருந்தான். தற்செயலாக உள்ளேயிருந்து வெளியே வந்த பெண்ணொருத்தி ஏன் இருக்கின்றீர்கள்? என வினாவினாள். இவனும் விடயத்தைச் சொன்னான். இவனுக்காக மீண்டும் உள்ளே சென்று வெளியே வந்தாள் அந்தப்பெண்

உங்கள் குரல் சரியில்லை. வானொலிக்குப் பொருத்தமில்லை. என்று சொல்லி சென்று விட்டாள் அவள்.

இப்படி, அந்தப் பெண் சொன்ன வார்த்தை அவன் காதிற்குள் அமிலமாகப் பாய்ந்திருக்க வேண்டும். இதயம் துடித்து நெகிழ்ந்தான். நேராகக் கடற்கரை சென்றான். அங்கே ஓரிடத்தில் இருந்து குலுங்கக்குலுங்க அழுதான். அவன் அழுகையைக் கட்டுப்படுத்த யாருமே அருகிலே இருக்கவில்லை.

அங்கிருந்து நடந்து நேராக தான் நடந்து வரும் அறைக்கு வந்து சேர்ந்தான். நண்பர்களுக்கும் விடயத்தைச் சொன்னான். நண்பர்கள் பலவழிகளிலும் அவனுக்கு உற்சாகம் தந்தனர். உடைந்துபோன அவன் உள்ளத்திற்கு உற்சாகம் தந்து தேற்றினர். நண்பர்களின் உற்சாகம் இவனுக்கொரு நெம்புகோலாக இருந்தது.

இப்படியாக இவனுக்கு நாளும் பல போராட்டங்கள் வந்து போயின. எல்லாமே தோல்வியில் முடிவடைகின்றன. ஆனாலும் மனம் தளர்ந்து விடவில்லை. விடாமுயற்சியைக் கையில் பிடித்து அடுத்தடுத்து தன் முயற்சிகளில் முன்னேறினான். எல்லாமே தோல்வியில்தான் முடிவடைந்தன.

இறுதியாக நடிப்பு என்ற முயற்சியை தனக்குள் நிரப்பி அலைந்தான். அவன் முயற்சி வீண் போகவில்லை. அதில் அவனுக்கொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனை சரிவரப் பயன்படுத்தினான். பல திரைப்படங்கள் நடித்தான். அத்தனையும் வெற்றிப்படங்கள். அவன் நடிப்புத்திறனுக்கு விருதுகளும் பரிசில்களும் குவிந்தன. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சூப்பர்ஸ்ரார் ஆனான் அவன்.

இன்று இவருக்கு எத்தனையோ ரேடியோ சனல்கள் உள்ளன என்பது வியப்பின் ஆச்சரியக் குறிகள்தான்.

அன்று இந்தச் சாதனையாளனின் விருப்பப்படி அந்த அறிவிப்பாளர் வேலை கிடைத்திருந்தால் உலகத்திற்கு ஒரு பெரிய சூப்பர் ஸ்ரார் கிடைத்திருப்பாரா? ஓ...! அவர்தான் நடிகர் அமிதாப்பச்சன்.

வாழ்க்கையில் எங்களுக்கென்று ஒரு சறுக்கல் வருகிறபோது மூத்தவர்கள் சொல்லுவார்கள் எல்லாம் நல்லதுக்கே..! என்று. அதுதான் அமிதாப்பச்சன் வாழ்விலும் நடந்திருக்கின்றன.

மாணவர்களே...! சின்னச்சின்னத் தோல்விகளும் நீங்கள் விரும்பிய ஒரு சந்தர்ப்பமும் கைநழுவிப் போகிறது என்றால் அதற்காக வருத்தம் கொள்ளவேண்டாம். நீங்கள் விரும்பிய ஏதோவொரு துறையில் எப்பவோ ஒருநாள் ஜொலிக்கப் போகின்றீர்கள் என்று நினைத்து முயற்சியைத் தொடருங்கள். நீங்களும் வெற்றியாளர்தான்.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார். எல்லோர் முகங்களிலும் வெற்றி ரேகைகள் ஒளிர்வதைக் காண்கிறார்.

பால்போன்ற நிலவும் எறிக்கத் தொடங்குகிறது.

9.

## பாசம்

பிள்ளைகளே நீங்கள் எல்லோரும் யார் யார் மீது அதிகமாக பாசம் வைத்துள்ளீர்கள். என்று கேட்டார் வாத்தியாரப்பு.

அம்மா மீது என்றும், அப்பா மீது என்றும் தம்பி, தங்கை மீது என்றும் பதில்கள் வந்தன.

வாத்தியாரப்பு மிக்க சந்தோசமானார். அப்படியொரு பாசமுள்ள ஒரு சிறுமியின் கதையைத்தான் இன்று உங்களுக்குச் சொல்லப்போகின்றேன் என்று சொன்னார்.

ஓர் ஊரில் ஒரு தம்பதியினர் சந்தோசமாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தாள். அவள் பெயர் தமயந்தி. அவள் தாய் மீண்டும் கருவுற்றிருந்தாள். அவர்களுக்குத் தெரியும் வயிற்றில் வளர்வது ஆண் குழந்தை என்று.

பெற்றோர்கள் இருவரும் தமயந்தியிடம் உனக்காக ஒரு தம்பி பாப்பா வரப் பாகிறான், நீயும் அவனும் சேர்ந்து ஜாலியா விளையாடப் போறீங்கள் என்று சொல்லி வளர்த்தார்கள்.

தமயந்தி, தன் அம்மா வயிற்றில் தினமும் கைகளால் தடவிக்கொண்டே டேய் தம்பி சீக்கிரம் வெளியே வாடா..! நாம ஜாலியா விளையாடலாம்..! நான் உன்னை யாருக்கும் குடுக்க மாட்டேன், நான் மட்டுமே உன்கூட விளையாடுவேன்..! என்று சொல்லிக் கொண்டே இருப்பாள்.

இன்னும் முகம் பார்க்காத தன் தம்பியிடம் அவ்வளவு பாசமாக இருப்பதை பார்த்து அவள் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்.

தமயந்திக்குத் தினமும் அம்மா வயிற்றில் இருக்கும் குழந்தையிடம் பேசுவதே வாடிக்கையாக இருந்தது. நாட்கள் உருண்டோடின. பிரசவ வலி எடுக்கவே மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

பிரசவம் சுகமாக இருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் மிக சிக்கலாகி சத்திரசிகிச்சை செய்துதான் குழந்தையை வெளியே எடுத்தார்கள்.

குழந்தை மிக பலவீனமாக இருக்கிறது இன்னும் சில நாட்களே உயிரோடு இருக்கும் என்று கூறி அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்த்திருந்தார்கள் மருத்துவர்கள்.

யாரையுமே உள்ளே சென்று குழந்தையைப் பார்க்க அனுமதிக்கவில்லை. பல பிரயத்தனங்களின் பிறகு

தந்தையை மட்டும் அனுமதித்தார்கள். அவர் உள்ளே சென்று குழந்தையை பார்த்துவிட்டு வந்து அழுதார். தமயந்தியிடம் வியத்தைச் சொல்லத்தயங்கினார்.

ஒரு வாரம் ஓடி விட்டது. தமயந்தி அடம் பிடிக்க ஆரம்பித்தாள்.

நீங்கள் மட்டும் பார்த்து போட்டு வந்திட்டியளே நானும் தம்பியை பார்க்க வேணும். என்று அழுது கத்தினாள்.

உன் தம்பி சாமிக்கிட்ட போகபோறான். உன்னை மருத்துவமனையில் பார்க்க அனுமதிக்க மாட்டார்களம்மா என்று அவள் அப்பா தயவாகச் சொன்னார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் சிந்தியது.

அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள். அவளின் அன்புக்கான அந்த ஆர்ப்பாட்டம் கண்ட தந்தை தமயந்தியிடம், சரி நாளைக்கு எப்படியாவது உன்னை உள்ளே கூட்டிக்கொண்டு போகிறேன் என்று சொல்லிச் சமாதானம் செய்தார்.

மறுநாள் மருத்துவமனைக்கு தந்தை போனார். கூடவே தமயந்தியையும் கூட்டிச்சென்றார்.

என் சின்னமகள் குழந்தையை பார்க்க அனுமதி தரவேண்டும் என்று கேட்டார்.

அவசரசிகிச்சை பிரிவுக்குள் குழந்தைகள் செல்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று மருத்துவர் கூறினார்.

தந்தை விட்டபாடில்லை. தன் மகளுக்காக மருத்துவரிடம் கெஞ்சிக்கேட்டார். ஒரு தந்தையின் கெஞ்சல் பார்த்துட மருத்துவர் இரக்கமானார். அவர்கள் இருவரும் உள்ளே சென்று குழந்தையைப் பார்த்துவர அனுமதி வழங்கினார்.

அனுமதி கிடைத்ததும் உடனேயே தமயந்தி உள்ளே ஓடிச் சென்றாள்.

அங்கே, குழந்தையின் பிஞ்சு விரலைப் பிடித்தாள். அவள் கை பட்டதும் குழந்தை லேசாக அசைந்தது.

டேய் தம்பி எழுந்து வாடா நாம விளையாடலாம். என்றாள்.

குழந்தை லேசாக மூச்சு விட ஆரம்பித்தது.

உன்னை நான் சாமிக்கிட்ட கொடுக்கமாட்டேன். நானே வச்சுக்குவேன். நீ என் கூடத்தான் இருக்கணும்.

இப்போது குழந்தையின் மூச்சு சீராக வர ஆரம்பித்தது. மருத்துவர்களே ஆச்சரியப்பட்டார்கள். குழந்தையை பரிசோதித்து பார்த்துவிட்டு இனி நீங்கள் பயப்படத் தேவையில்லை என்றார்களாம்.

நாம் ஒரு பொருள் மேல் உண்மையான பாசம் வைத்தால் அந்த ஆண்டவனே நினைத்தாலும் நம்மிடமிருந்து பிரிக்க முடியாது என்பதையே இந்தக் கதை எடுத்தியம்புகிறது.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார்.

மாணவர்களின் கண்களில் கண்ணீர் பனித்து வருவதை வாத்தியாரப்பு அவதானித்தார்.

அது, வாத்தியாரப்புக்கு அதிசயமாகவே இருந்தது. மனம் ஆனந்தமானார்.

## 10.
## நம்மால் முடியும்

வாத்தியாரப்பு கல்குந்திலே அமர்ந்திருக்கிறார்.

ரஜித்தமனும் வித்தியனும் வந்திருந்து விட்டார்கள். தீபிகா சந்தோஸ் இனியவன் மூவரும் ஓடி வருகிறார்கள். சத்தியனையும், மகிழ்நனையும் இன்னும் காணவில்லை.

அதோ அவர்கள் வருகிறார்கள். சந்தோஸ் சத்தமாகச் சொன்னான்.

எல்லோரும் வந்துவிட்டார்கள். வாத்தியரப்பு கதை சொல்லத் தொடங்கினார்.

பிள்ளைகளே, விடாமுயற்சி பற்றித்தான் இன்று ஒருகதை சொல்லப்போகின்றேன். சொல்லுகிறேன் கேளுங்கள்?

ஒரு நிறுவனத்தின் தலைவர் ஒருவர் இருந்தார். நிறுவனத்தில் சில தவறுகளால் ஐம்பது இலட்சம்ரூபா நட்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போன அவர் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்றார். அங்கிருந்த சீமெந்தினால் உருவான வாங்கிலில் அமர்ந்திருந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர்போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்தமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டார்.

ஏன் சோகமாக இருக்கிறீர்கள் என்று கேட்டார்.

அதற்கு இவர், எனது தொழிலில் நான் நட்டம் அடைந்து விட்டேன். இதனால் மனம் உடைந்து போய்விட்டேன் என்றார்.

எவ்வளவு நட்டம்? என்று கேட்டார் வந்தவர்.

ஐம்பது இலட்சம் ரூபாய் என்றார் இவர்.

அப்படியா..! நான் யார் தெரியுமா? தன் ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார். அவர்தான்தான் என்றார். அசந்து போனார் இவர்.

சரி ஐம்பது இலட்சம்ரூபா பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா? என்று கேட்டார் வந்தவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவரும் ஆமாம், எல்லாம் சரியாகி விடும் என்றார்.

பின் அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி இந்தா

ஐந்நூறுஇலட்சம் ரூபாவிற்கான காசோலை இது. நீ கேட்டதைவிட பத்து மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை இதே இடத்தில் எனக்கு திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன் என்று சொல்லிவிட்டு காசோலைய இவர் கைகளில் திணித்துவிட்டு சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த காசோலையை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களையும் நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்யச் சொன்னார். சில நேரங்களுக்குள்ளாகவே ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இப்ப நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார்.

நண்பர்களே...! நமது நிறுவனத்தில் ஐம்பது இலட்சம்ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் ஐந்நூறு இலட்சம்ரூபா உள்ளது. ஆனாலும் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நட்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் எதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்குப்பிறகு அந்த நிறுவன வேலைகள் வலு வேகமாக நடைபெறத்தொடங்கின. தவறுகள் கண்டுப் பிடிக்கபட்டு களையப்பட்டன. மிக சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு மூச்சு செயல் சிந்தனை தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலை பற்றியே இருந்தன.

இப்படியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிக சரியா ஐந்நூறு இலட்சம் ரூபாய்கள் இலாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம்.

அடுத்தநாள் விடியற்காலை அந்த செல்வந்தர் தந்த ஐந்நூறு இலட்சம் ரூபாவிற்கான காசோலையினை எடுத்துக்கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார் நிறுவனத்தின் அதே தலைவர். சென்ற வருடம் அமர்ந்த அதே சிமெந்து வாங்கிலில் அமர்ந்தார். காலைநேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது.

சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரோடு ஒரு பெண்மணியும் வந்தாள். அவர்கள் இருவரும் பனி மூட்டத்தின் ஊடே இவரின் கண்களுக்குத் தெரிந்தனர். சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறாள். அந்த செல்வந்தரை காணவில்லை.

உடனே எழுந்து சென்று அந்த பெண்மணியிடம் அம்மா உங்கள்கூட வந்தவர் எங்கே? என்றார்

அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா? என்று கேட்டாள்.

இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்? என்றார் இவர்.

அந்த பெண்மணியோ, இல்லை ஐயா அவர் ஒரு பைத்தியம். அதாவது மனநிலை சரி இல்லாதவர், காசோலை தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய காசோலையைக் கிழித்து கையேழுத்திட்டு கொடுத்து விடுவார் அவ்வளவுதான் என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேசமுடியாமல் போய்விட்டது. தன்னால் இதை நம்பமுடியவில்லை என்பதை உணர்ந்தார். அதற்குப் பிறகு தன் சிந்தனையை கொஞ்சம் விரிவு செய்தார்.

நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுதான் நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்து ஒரு தெம்புடன் நடந்து போனார்.

பிள்ளைகளே எந்த ஒரு விசயமும் நம்மால் முடியும் என்று முதலில் நாம் நம்பவேண்டும்! அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும். இதுதான் உண்மை.

வாத்தியார் கதை சொல்லி முடித்தார்.

## 11.
## ஓர் உண்மையான கதை

வாத்தியாரப்பு நேற்று நீங்கள் சொன்ன விடாமுயற்சி கதையை அப்பாவிடம் சொன்னேன். தன் நண்பனுக்கும் இப்படித்தான் தொழில் நட்டம் ஏற்பட்டு பிறகு விடாமுயற்சியால் முன்னேறின கதையைச் எனக்குச் சொன்னவர். வித்தியன் சொன்னான்.

நல்லது பிள்ளைகள். இன்று என் நண்பனின் மகனுக்கு நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றைச் சொல்லப்போகின்றேன். கவனமாக கேளுங்கள் பிள்ளைகள்?

வாத்தியாரப்பு சொல்லத் தொடங்கினார்.

என் நண்பனுடைய மகனின் மனைவி ஆரம்பப்பள்ளி ஆசிரியை. அவர், தன் மாணவர்களிடம் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். கடவுள் தங்களுக்கு என்ன செய்யவேண்டும் என விரும்புகிறீர்கள் என்பதுதான் கட்டுரையின் தலைப்பு.

மாணவர்களும் கட்டுரை எழுதி ஆசிரியையிடம் கொடுத்தார்கள். நாளை திருத்தித் தருவதாகச் சொல்லி கட்டுரைகளை வீட்டிற்கு எடுத்துச் சென்றார்.

ஆசிரியை அக்கட்டுரைகளை திருத்தும் பொழுது அதில் ஒரு கட்டுரையை படித்து கண் கலங்கினார். அதைக் கண்ட கணவர், ஏன் என்ன ஆச்சு? ஏன் அழுகிறாய்? என்று கேட்டார்.

என் மாணவன் எழுதிய இந்தக்கட்டுரையை படித்துப் பாருங்கள் புரியும் என்று சொல்லி கணவரிடம் அந்தக் கட்டுரையினை கொடுத்தார்.

அதில், கடவுளே! என் வீட்டில் இருக்கும் தொலைக்காட்சிபெட்டியை போல் என்னையும் ஆக்கிவிடு. நான் அதன் இடத்தை பிடிக்க வேண்டும். அதைப்போல கவனமுள்ள ஒருவனாக நானும் வாழவேண்டும். என் உறவுகள் என்னை சுற்றியிருந்து என்னோடு பேசவேண்டும். நான் பேசுவதையும் மற்றவர்களும் கவனமாக கேட்கவேண்டும். என் குடும்பத்தவர்களின் கவனமும் என்னைச் சுற்றியே இருக்க வேண்டும். தொலைக்காட்சி ஓடாதபொழுதும் அது பெறும் சிறப்புக் கவனத்தை பெறுவதுபோல் நானும் பெறவேண்டும். அப்பா வேலை முடித்து வந்ததும் என்னுடன் விளையாடவேண்டும். அவர் களைப்பாக இருந்தாலும் அம்மா கவலையாக இருந்தாலும் என்னை விரும்பவேண்டும். என்னை விலக்கக் கூடாது. என் சகோதர சகோதரிகள் என்னுடன் விளையாடவேண்டும். அன்பாகச் சண்டையிடவேண்டும். என் குடும்பத்தினர் அனைவரும்

என்னுடன் சில மணிகளாவது கதைப்பதற்குச் செலவிடவேண்டும். கடைசியாக ஒன்று, நான் என் குடும்பத்தினர் அனைவரையும் எப்பொழுதும் மகிழ்விக்க வேண்டும். என் இறைவா! நான் உன்னிடம் அதிகம் கேட்கவில்லை, நான் தொலைக்காட்சி பெட்டியை போல் கவனமுள்ள ஒருவனாக வாழவேண்டும் அவ்வளவுதான்.

இதை படித்துவிட்டு கணவரின் எண்ணங்கள் அந்த மாணவனுக்காக இரக்கம் கொள்ளத்தொடங்கின. கண்கள் கலங்குகின்றன. அவை அவரின் கண்களில் பளிச்சென்று தெரிகின்றன.

அந்த மாணவன் பாவம்! இந்த மாணவனை கவனிக்காமல் இருக்கும் பெற்றோர் என்ன ஜென்மமோ? இவர்கள் எல்லாம் பெற்றோரா? கறுமங்கள்! என்று கடும் கோபமாகத் திட்டினார்.

ஆசிரியை தன் கணவரிடம் சொன்னார், இந்தக் கட்டுரையை எழுதியது நம் மகன் தானப்பா என்று.

சில நேரங்களுக்கு கணவர் மௌனமாகவே நின்றார். வெக்கம் அவரை சூழ்ந்து கொள்கின்றது.

கதை கேட்டு முடிந்ததும் மாணவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். வாத்தியாரப்புவும் அவர்களோடு சேர்ந்துகொண்டார்.

## 12

**பயமா? பயம் என்றால் என்னம்மா?**

இன்று பௌர்ணமிதினம். நிலவு ஒளி வீசிக்கொண்டிருந்தது. வாத்தியாரப்பு வீட்டு முற்றத்தில் எல்லோரும் அமர்ந்திருந்தனர். கதை கேட்க மாணவர்களும் ஆவலாக இருந்தார்கள்.

கதை சொல்லத்தொடங்கினார் வாத்தியாரப்பு.

வேப்பமர உச்சத்தில் பேய் இருக்கிறது! அங்கே போகக்கூடாது! என் ராசா நீ சின்னப்பிள்ளை! என்ர பவுண்! என்ர கடவுள்! இங்கை வாங்க! எனக்குக் கிட்ட இருங்க!

இப்படி தங்கள் பிள்ளைகளிடமோ பேரப்பிள்ளைகளிடமோ பரிந்துரைப்பதை யாரும் பார்த்திருப்பீர்கள்தானே?

இவை மட்டுமில்லை, ஆந்தை கத்துவதை கேட்டாலோ; ஆட்காட்டிக்குருவி கீச்சிட்டபடி பறந்து திரிந்தாலோ; உங்கை உம்மாண்டி வருது! சத்தம் போடக்கூடாது! சத்தம் போட்டால் பிடிச்சுக்கொண்டு போயிடும்.

என்றெல்லாம் பெரியவர்கள் சின்னவர்களைப் பார்த்து சொல்லுவதை நீங்களும் கேட்டிருப்பீர்கள் தானே!

ஓம் ஓம் கேட்டிருக்கிறோம், அனுபவித்திருக்கிறோம் வாத்தியாரப்பு. எல்லோரும் ஒருமித்து பதில் சொன்னார்கள்.

சின்னவர்கள் மேல் பெரியவர்களின் இவ்வாறான பக்குவப்படுத்தல் முறை என்பது சரியானதொன்றல்ல. சின்னவயதிலிருந்தே சின்னவர்களைப் பெரியவர்கள் பயந்தாம் கொள்ளிகளாக வளர்க்கப் பாடுபடுகிறார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

காட்டில் வாழும் விலங்குகள் பற்றியும், அவற்றின் சிறப்பியல்புகள் பற்றியும் சொல்லிக்கொடுக்கலாம்.

கடல், குளம், ஆற்றில் வாழும் உயிரினங்கள் பற்றியும், நிலத்தில் ஊர்ந்து வாழும் ஊர்வன பற்றியும் சொல்லிக்கொடுக்கலாம்.

வரலாற்று மனிதர்களின் வீரம்பற்றியும் சான்றோர்களின் புகழ்பற்றியும் கதைகளாகச் சொல்லிக்கொடுக்கலாம்.

சிறுவர்களின் நடத்தைகளை நீங்கள் கட்டாயம் அவதானிக்க வேண்டும். அந்த அவதானங்களில் ஓர் எச்சரிக்கை உங்களுக்குள் இருக்க வேண்டும். தவறானது என்று உங்களுக்கு தெரிந்தால் அவற்றினைச் சுட்டிக்காட்டுவதற்கு சில சம்பவங்களைச் சொல்லிக்காட்டலாம். தயவு செய்து பயம் என்பதை மட்டும் சொல்லிக்கொடுக்காதீர்கள்.

சரியில்லாத நடத்தைகளாலும் முரடான செயற்பாடுகளாலும் வரக்கூடிய பாதகங்களையும் நோய்களையும் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

இப்படிச் சொல்லக்கூடிய தகுதியும் கடமையும் உங்கள் ஒவ்வொரு பெற்றோருக்கும் பாதுகாலருக்கும் கட்டாயம் இருக்கிறது. அப்படி அதைச் சொல்லும்போது பயமுறுத்த வேண்டிய அவசியமில்லை. நீங்கள் பயப்பிடவேண்டிய அவசியமில்லை.

இப்படித்தான் ஒருநாள், இரவில் தாயின் அருகில் படுத்திருந்த ஒரு சிறுவனுக்கு ஏனோ தூக்கம் வரவில்லை. படுக்கையை விட்டு எழுந்தவன் கதவை திறந்து வெளியே வந்தான். வீட்டின் அருகிலே குளம் ஒன்று இருந்தது. பௌர்ணமி நிலவும், அதன் ஒளியில் ரம்மியமாக காட்சி தரும் குளத்தின் நீர்ப்பரப்பும் அவன் மனதை கவர்ந்தன.

அச்சிறுவன் குளக்கரையில் அமர்ந்துகொண்டு சிறுகற்களை நீரில்போட்டு அதன் மூலம் எழும் அலைகளை ரசித்தபடி இருந்தான்.

வீட்டில் திடுமென கண்விழித்த தாய் அருகில் படுத்திருந்த மகனை காணாமல் பதறிப்போனாள். கதவு திறந்திருப்பது கண்டு பதைபதைப்புடன் வெளியே ஓடி வந்தாள்.

தன்மகன் குளக்கரையிலே அமர்ந்திருப்பதை பார்த்து நிம்மதி பெருமூச்சு விட்டாள் தாய்.

அவன் அருகில் சென்று மகனே நள்ளிரவு வேளையில் இங்கு வந்து தனியாக இருக்கிறாயே! உனக்கு பயம் இல்லையா? என்று கேட்டாள்.

உடனே அந்த சிறுவன் பயமா? பயம் என்றால் என்னம்மா? என்று கேட்டான்.

அதற்கு பதில் சொல்ல தெரியாமல் திகைத்தாள் அந்தத்தாய்.

இளம் வயதில் பயம் என்றாலே என்னவென்று அறியாத அந்தச் சிறுவன் யார் தெரியுமா?
பல நாடுகளை வென்று வெற்றிகளை அள்ளிக் குவித்த மாவீரன் நெப்போலியன்தான் அவன்.

மாணவர்களின் முகங்களில் ஒரு ஒளி பிரகாசமாகத் தெரிந்தது.

இனியவனின் அம்மா வந்து நின்றார். இனியவனைக் கூட்டிக்கொண்டு போனார்.

சித்தி நானும் உங்களோடு வாறேன் என்று சொல்லி வித்தியனும் அவர்கள் பின்னே ஓடிப்போனான்.

## 13

**நம்முடைய நான்காவது விரலை ஏன் மோதிர விரல் என்கிறோம் தெரியுமா?**

கதையைத் தொடங்குங்கள் வாத்தியாரப்பு என்று ரஜித்தனா கேட்டாள்.

ஆமாம் தொடங்குங்கள் வாத்தியரப்பு என்று மகிழ்நனும் ராகம் பாடினான்.

வாத்தியாரப்பு கதை சொல்லத் தொடங்கினார்.

எங்கள் கைகளில் விரல்கள் இருக்கின்றனதானே!

கட்டை விரல், சுட்டுவிரல், நடுவிரல், மோதிர விரல், சின்னவிரல் என்பவையே அவை.

மோதிரவிரலில் மோதிரம் அணிவதால் இருதயநோய், வயிற்றுக்கோளாறு போன்ற வியாதிகள் நீங்கிப்போகுமாம். அத்தோடு, ஆண் பெண் இனவிருத்தி உறுப்புகளுக்கு சக்தி அளிக்கிறதாம்.

மாறாக, சுட்டுவிரலில் மோதிரம் அணியக்கூடாது என்றுதான் சொல்லுகிறார்கள். இதற்கான விஞ்ஞானவிள்க்கம், இதயத்திற்கான இரத்த ஓட்டம் தடைப்படும் என்பதுதான் உண்மை.

மேலும் நம்முடைய நான்காவது விரலை ஏன் மோதிர விரல் என்கிறோம் தெரியுமா?

மாணவர்கள் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்தனர். பிறகு, வாத்தியாரப்புவை நோக்கினர்.

ஆள்காட்டிவிரல் உங்களின் சகோதரர்களை குறிக்கிறது.

நடுவிரல் உங்களை குறிக்கிறது.

மோதிரவிரல் உங்களின் வாழ்க்கை துணையை குறிக்கிறது.

சின்னவிரல் உங்களின் பிள்ளைகளை குறிக்கிறது.

பெருவிரல் உங்களின் பெற்றோரைக் குறிக்கிறது.

உங்களின் இரு உள்ளங்கைகளையும் நேருக்குநேராக இருக்க செய்யுங்கள். நடு விரலை மடித்து ஒட்ட வையுங்கள். மற்றைய விரல்களை நிமிர்த்தி ஒட்ட வையுங்கள்.

பெருவிரலை பிரித்துப்பாருங்கள். பிரிக்கமுடியும். அதாவது உங்களின் பெற்றோர் உங்களுடன்

எப்போதும் இருக்கமாட்டார்கள் என்பதையே இது குறிக்கிறது.

பெருவிரலை பழையபடி ஒட்டிவைத்து சுட்டுவிரலை பிரித்துப்பாருங்கள். பிரிக்க முடியும். அதாவது உங்களின் சகோதரர்கள் உங்களுடன் எப்போதும் இருக்க மாட்டார்கள் என்பதையே இது குறிக்கிறது.

இதுபோல் உங்களின் சிறியவிரலை பிரித்துப்பாருங்கள், பிரிக்கமுடியும். அதாவது உங்களின் பிள்ளைகள் உங்களுடன் எப்போதும் இருக்கமாட்டார்கள் என்பதையே இது குறிக்கிறது.

ஆனால் உங்களின் மோதிரவிரலை பிரித்துப்பாருங்கள். பிரிப்பது மிகவும் சிரமமாக இருக்கும்.

அதாவது கணவன் மனைவி எப்போதும் ஒன்றாக பிரியாமல் இருக்கவேண்டும் என்பதற்க்காகவே திருமண சடங்குளில் மோதிரம் அணிகிறார்கள். அதனால்தான் அந்த விரலை மோதிர வஜரல் என்று சொல்லுகிறோம்.

கதை சொல்லி முடித்தார் வாத்தியாரப்பு.

மீண்டும் நாளை சந்திப்போம் என்று சொல்லி போக ஆயத்தமானார் வாத்தியாரப்பு. பிள்ளைகளும் போகவெளிக்கிட்டார்கள்.

14.

## மன்னனொருவனின் கதை

பிள்ளைகளே முகநூல் என்று பலவாறாக கதை அடிபடுகிறதுதானே! அதுபற்றித்தான் ஒரு சுவார்சியமான கதை சொல்லப்போகிறேன்.

எங்கள் வீட்டிலும் முகநூல் வசதியிருக்கிறது இனியவன் சொன்னான்.

அவனைத் தொடர்ந்து, எங்கட வீட்டிலும்தான் இருக்கிறது. மகிழ்நன் சொன்னான்.

இதைக் கேட்டு மற்ற மாணவர்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

முகநூலை ஆண்டுகொண்டிருந்த ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு திடீரென ஒரு சந்தேகம் உதித்தது. உடனடியாக அமைச்சரை வரவழைத்தார்.

நான் இந்த, முகநூலை இவ்வளவு நன்றாகவும், புத்திசாலித்தனத்துடனும் ஆண்டு வருகிறேன். ஆனால் இந்த முகநூலில் முட்டாள்கள் இருப்பார்கள் அல்லவா?"

ஆம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே!

அப்படியானால் அவர்களில் முதல் ஐந்து முட்டாள்கள் யார்? அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கூட்டிக்கொண்டு வருவது உமது பொறுப்பு என்றார்.

அமைச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை. புத்திசாலியைக் கொண்டு வரச்சொன்னால் ஏதாவது போட்டி வைத்து வெற்றியாளரைக் கொண்டு வந்து நிறுத்தலாம். முட்டாளைக் கொண்டு வரச்சொன்னால்? என்ன செய்வது? சொன்னவர் இந்தநாட்டின் ஜனாதிபதி ஆயிற்றாரே..!

சரி மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே என்று அரைகுறை மனதோடு ஒத்துக் கொண்டார் அமைச்சர்.

ஒரு மாதம் முகநூல் முழுவதும் பயணம் செய்து இரண்டுபேரை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். இப்படி இருவரோடு வந்த அமைச்சரை பார்த்த ஜனாதிபதிக்கு சினம் வந்திருக்க வேண்டும்.

அமைச்சரே உமக்குக் கணிதம் மறந்து விட்டதோ? என்று கேட்டார்.

இல்லை ஜனாதிபதி அவர்களே! முதலில் நடந்தவற்றை விளக்க அனுமதிக்கவேண்டும்! என்றார் அமைச்சர்.

சரி தொடரும் என்றார் ஜனாதிபதி.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே! நான் முகநூல் முழுவதும் சுற்றும்போது, இவனைச் சந்தித்தேன். இவன் என்னோடு கருத்துரை வழங்கிக் கொண்டிருந்தான். நாம் இருவரும் ஆளுக்காள் கேள்விபதில் அளித்துப் பார்த்து விட்டுத்தான் இவனை இங்கே கூட்டி வந்தேன் என்றார்.

அப்படி என்ன இவரிடம் விசேசம் இருக்கிறது ஜனாதிபதி கேட்டார்.

இவர் பல ஆண்டுகளாக அந்த ஊரின் தலைவராக இருந்து வருகிறார். முக்கியமாக அந்த ஊரின் வாசிகசாலை, கோயில் நிறுவனங்களில் தலைவராக இருந்திருக்கிறார். இவர் சொன்னதே சட்டம். இவரை எதிர்த்து யாருமே எதுவும் பேசமாட்டார்கள். இவருக்கென்று கைக்கூலிகளும் இருக்கிறார்கள். இவரின் அடாவடித்தனங்கள் பற்றியும் இவரின் சுயநலங்கள் பற்றியும் சரியான முறையில் எவராவது விமரசனம் செய்தால் அவற்றை எல்லாம் இவரிடமே வந்து சொல்வதற்கு அந்தக் கைக்கூலிகள் திறமையாக செயற்படுவார்களாம்.

அப்புறம், சொல்லுங்கள் அமைச்சரே! ஜனாதிபதி ஆவலுடன் கேட்டார்.

ஆம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே! அப்படி சரியாகவும் கடுமையாகவும் விமர்சனம் செய்தவர் பற்றி

அவதூறான கதைகள் கட்டி ஊரெல்லாம் பரவவிடுவார். பிறகு இரவோடு இரவாக அவர்வீட்டு மதிலுக்கோ அல்லது அவர்வீட்டு தண்ணிடாங்கிற்கோ கழிவோயில் ஊத்தச் சொல்லுவார் இந்த மனிதர்.

சபாஸ்...! சுவார்சியமாகச் சொன்னீர்கள். மேலும் தொடருங்கள். ஜனாதிபதி அவசரமாய் கேட்டார்.

இதோ இருக்கிறானே, அடுத்தவன் இவன்தான் நான்காவது முட்டாள்.

இன்னும் தொடருங்கள் அமைச்சரே..!

ஆமாம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே..! இவன் எல்லோரிடமும் நல்லவன் போலவே பழகுவான். தனக்கு யாருமே எதிரி இல்லையென்று எப்பவும் பிதற்றுவான். தான்தான் எல்லோரிடமும் நல்லவன் என்றமாதிரி அடிக்கடி புழுகுவான். யாரின் சோலிசுறட்டுக்கும் போவதில்லை என்றெல்லாம் சொல்லுவான்.

அப்ப....!

ஆம், மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே மற்றவர்கள் எல்லோரும் முட்டாள்கள்! தான்தான் புத்திசாலி என்பான். எப்போதும் தானே நல்லகுணமுடையோன்

என்றும் நினைப்பவன் இவன். அந்த ஊரில் இரு குழுக்களுக்கிடையில் சண்டை வந்தால் அதில் ஒரு குழுவினரின் வீட்டுக்கு ஓயில் ஊத்திவிட்டு அமைதியாக இருந்துவிடுவான். அதுமட்டுமில்லை மொட்டைக்கடிதம் எழுதி அனுப்பிவிட்டு இரு குழுக்களுக்கிடையில் சண்டையை ஏற்படுத்திவிடுவான். ஆதலால், இவனே நான்காவது முட்டாள்.

களிப்படைந்தோம் அமைச்சரே! களிப்படைந்தோம்! சரி, எங்கே அடுத்த முட்டாள்? ஜனாதிபதி முழங்கினார்.

சமூகத்தில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கும்போது, அதையெல்லாம் விட்டுவிட்டு முட்டாள்களைத்தேடி, கடந்த இருமாதங்களாய் அலைந்து கொண்டிருந்த நான்தான் மூன்றாவது முட்டாள்.

மன்னருக்குச் சிரிப்பு தாங்கமுடியவில்லை. விழுந்து விழுந்து சிரித்தார். மற்ற அமைச்சர்களும், மண்டபத்தில் உள்ளவர்களும் சிரித்தார்கள். சிரிப்பினை அடக்க முடியாத ஜனாதிபதி இரு கரங்களாலும் வாயைப் பொத்திக்கொண்டே அடுத்த முட்டாள் யார் என்று சொல்லுங்கள்..? என்று கேட்டார்.

முகநூலில் எத்தனையோ நல்ல விடயங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கற்பதை விட்டு

விட்டு முட்டாள்களைத் தேடிக்கொண்டிருக்கும் நீங்கள்தான் இரண்டாவது முட்டாள் என்று படக்கென்று சொன்னார் அமைச்சர்.

ஒரு நிமிடம் அரசவையே ஆடிவிட்டது. யாரும் எதுவுமே பேசவில்லை. யாருக்கு என்ன? ஏது? நடக்கப்போகுது என்று அங்கலாய்த்தபடி பயந்து கொண்டே இருந்தனர்.

உமது கருத்திலும் நியாயம் உள்ளது. நான் செய்ததும் தவறுதான் என ஒத்துக் கொண்டார் ஜனாதிபதி.

சரி எங்கே முதலாவது முட்டாள்? ஜனாதிபதி கேட்டார்.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே! அலுவலகத்திலும், வீட்டிலும் எத்தனையோ அலுவல்கள் இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டு முகநூலே குடியென்று வாழ்ந்துகொண்டு இப்படி மொக்கையான கதைகளை படித்துக்கொண்டு இருப்பவர்களே இந்த நாட்டின் மிகப்பெரிய முட்டாள் என்று சொல்லி முடித்தார் அமைச்சர்.

ஐ.....யோ..! அப்ப, இந்தக்கதை கேட்டுக்கொண்டிருக்கிற நாங்களுமா முட்டாள்..? தீபிகா கேட்டாள்.

வாத்தியாரப்புவோடு சேர்ந்து எல்லோரும் சிரிக்கிறார்கள்.

## 15

## மரமொன்றின் கதை

பிள்ளைகளே நாமெல்லாம் இந்த ஆலமரத்திற்குக் கீழே இருக்கிறோம்தானே. இந்த ஆலமரம் போலவே ஒவ்வொரு மரமும் எங்களுக்கு பலவிதங்களில் பல நன்மைகளைச் செய்கிறன.

அவைபற்றி நாமும் அறிந்திருக்கிறோம் வாத்தியாரப்பு. என்று எல்லோரும் ஒருமித்து பதில் தந்தனர்.

சரி, அப்படியான ஒருமரத்தின் கதையைத்தான் இன்று நான் சொல்லப்போகிறேன்.

ஒரு ஊரிலே அழகான மாஞ்சோலை இருந்தது. அங்கே பலவித மரங்கள் நிறைந்து நின்றாலும் குலைகுலையாக கனிகளைத் தருகின்ற மாமரங்களே அதிகமாக வளர்ந்து நின்றன. அதனால்தான் அதனை எல்லோரும் மாஞ்சோலை என்று அழைத்தனர்.

அங்கே உள்ள பெரிய மாமரத்துடன் விளையாடுவதை ஒரு சிறுவன் வழக்கமாக கொண்டிருந்தான். தினமும் அந்த மரத்தை பார்க்கக் கண்டிப்பாக வந்துவிடுவான். அந்த மரமும் அவனுடன் விளையாடி மகிழ்ந்தது.

மாம்பழங்களைப் பறித்துச் சாப்பிடுவான்.

அதிலே ஏறி விளையாடுவான். மரக்கிளையில் பிடித்துத் தொங்குவான். மரத்தைக் கட்டியணைத்து முத்தமிடுவான். இப்படி அந்த மாமரத்தோடு சின்னச்சின்னக் குறும்புகள் செய்து விளையாடிக் கொண்டிருப்பான்.

அவனை பார்க்கும்போதும், அவனுடன் விளையாடும்போதும் அந்த மாமரத்திற்கு அளவற்ற மகிழ்ச்சி.

சிறுவன் கொஞ்சம் பெரியவனானான். ஒருநாள் மரத்தைப் பார்க்க வந்தான். அவனைப் பார்த்த மாமரம் வா வந்து என்னுடன் விளையாடு என்று ஆசையாக அழைத்தது.

இல்லை இப்போதெல்லாம் மரத்தில் ஏறியோ, மரக்கிளையில் தொங்கியோ விளையாட என்னால் முடியாது. நான் பெரியவன் ஆகிவிட்டேன். சவாரிசெய்து விளையாட எனக்கு குதிரைப்பொம்மை வேண்டும் என்றான் அந்தச் சிறுவன்.

என்னிடம் குதிரைப்பொம்மை எதுவுமில்லை. என்னிடமிருக்கும் மாம்பழங்களில் தாராளமானவற்றைப் பறித்துக்கொள். அதை விற்றுப்பணமாக்கி குதிரைப்பொம்மை வாங்கிக்கொள் என்றது அந்த மாமரம்.
சிறுவனின் முகம் உடனே மலர்ந்தது.

அப்படியா உண்மையாகவா!! என்று எல்லா பழங்களையும் பறித்துக்கொண்டு சென்றான்.

அதன் பிறகு கனகாலங்களாக அவன் மாமரத்தைப் பார்க்க வரவேயில்லை. இது மாமரத்திற்கு ஏமாற்றமாகவே இருந்தது.

சிலகாலங்கள் கழித்து மீண்டும் அங்கே வந்தான். இம்முறையும் வா, வந்து என்னுடன் விளையாடு என்று சிறுவனை அழைத்தது மாமரம்.

இல்லை நான் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறேன். நான் என் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளவேண்டும். நாங்கள் தங்குவதற்கே வீடு இல்லாமல் இருக்கிறோம். உன்னால் எங்களுக்கு வீடு தரமுடியுமா என்று கேட்டான் அவன்.

என்னிடம் வீடு இல்லை. என் கிளைகளில் சிலவற்றை எடுத்துக்கொள். அதைக்கொண்டு சிறியவீடு அமைத்துக் கொள் என்றது மாமரம்.

மீண்டும் அவனின் சந்தோசத்தைக்கண்டு மாமரம் மகிழ்ந்தது.

தன்னிடம் இருப்பதை இழக்கிறோம் என்று மாமரம் கொஞ்சமும் வருந்தவில்லை. சிறுவனின் சந்தோசமே மாமரத்திற்கு முக்கியமானதாக இருந்தது.

சில நாட்களாக அவன் அந்த இடத்திற்கு வராது இருந்தான். வழக்கம்போல் மாமரம் அவன் வரவிற்காக ஏங்கித் தவித்தது. நீண்ட நாட்கள் கழித்து மீண்டும் ஒரு கோடை நாளில் அவன் வந்திருந்தான்.

எனக்கு வெப்பமாக இருக்கிறது. கடலுக்கு செல்ல ஆசையாக இருக்கிறது. எனக்கு ஒரு படகு வேண்டும் என்றான்.

என்னிடம் படகு இல்லை, ஆனால் நீ என் தண்டுப் பகுதியை எடுத்து படகு செய்துகொள் என்றது மாமரம்.

அவனும் அதில் தனக்கு வேண்டியதை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான்.

காலங்கள் ஓடிவிட்டன. அவனுக்கும் வயதாகியிருந்தது. அப்போது ஒருநாள் மரத்தைப் பார்க்க அவன் வந்தான். இம்முறையும் மரம் அவனை ஆசையாய் வரவேற்று அரவணைக்க நினைத்தது.

எனக்கு வயதாகிவிட்டது. மிகுந்த களைப்பாய் இருக்கிறேன். நான் இங்கு ஓய்வு எடுக்க ஆசைபடுகிறேன் என்றான்.

எல்லாவற்றையும் இழந்து நின்ற மாமரம் சிரித்துக் கொண்டே சொன்னது

என்னிடம் இருப்பது வேர் மட்டுமே. நீ என் வேர்ப் பகுதியைச் வெட்டிவிட்டு அந்த இடத்தில் ஓய்வு எடுத்துக்கொள் என்று சொல்லிக்கொண்டே சரிந்து விழுந்தது அந்த மரம்.

பாறிவிழுந்து செத்துக்கொண்டிருக்கும் மாமரத்தின்மேலே அவன் படுத்துறங்கினான். அவனுக்கும் அது நல்ல நிம்மதியாகவே இருந்தது.

இந்தக் கதையிலிருந்து உங்களுக்கு என்ன புரிகிறது. வாத்தியார் கேட்டார்.

நாம் மரங்களிடமிருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொள்கிறோம். பிறகு, வெட்டித்தறித்து விடுகிறோம். மரத்தை வெட்டுவது பாவம்! சந்தோஸ் பதில் சொன்னான்.

இக்கதை அதை மட்டும் சொல்லவில்லை. இந்த மாமரம்தான் நம் ஒவ்வொருவரினதும் பெற்றோர் என்று நினைத்துங்கொள்ளுங்கள்.

சிறுவயதில் பெற்றோருடன் ஆடிப்பாடி மகிழ்கிறோம். வளர வளர அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்

விலகி நம் தேவைகளுக்கு மட்டும் அவர்கள் முன் சென்று நிற்கிறோம். அதாவது எங்களின் ஒரு சுயநலத்திற்கு அவர்களைப் பயன்படுத்த எண்ணுகிறோம்.

அவர்களோ இவன் தனக்கு தேவையுள்ளபோதே என்னைத் தேடி வருகிறான். ஆகவே இவனை நான் பழிவாங்க வேண்டும் என்று நினைக்க மாட்டார்கள்.

மாறாக ஐயோ, என் மகன் கன காலங்கள் கழித்தாவது என்னைத் தேடி வந்திருக்கிறானே! அவனுக்கு ஏதாவது உதவி செய்தாகவேண்டுமே என்றுதான் அங்கலாய்ப்பார்கள்.

பெரும்பாலான ஒவ்வொரு மனிதனும் தமக்கென்று ஒருகுடும்பம் வந்ததும் பெற்றவர்களிடம் இருந்து முழுவதுமாய் ஒதுங்கி விடுகிறார்கள். தமக்கு ஒரு பிரச்சினை என்றதும், தம்மைக் காப்பாற்றிக்கொள்ள மட்டுமே பெற்றவர்களை எதிர்பார்த்து வருகிறார்கள்.

பெற்றவர்களோ, இந்த மாமரத்தைப் போன்றே பிள்ளைகளின் வரவிற்காக எப்பொழுதும் ஏங்கிக் கொண்டிருப்பார்கள்.

தம்மால் இயன்றதை தம் பிள்ளைகளுக்குக் கொடுத்து பிள்ளைகளின் புன்னகையில் சந்தோசத்தைத் தேடுபவர்களே இனிய பெற்றோர்களாவர்.

16.

## வாழ்வியலில் ஒரு சம்பவம்

பிள்ளைகளே தீயது நினைத்தால் தீமை நடக்கும். நல்லது நினைத்தால் நன்மை நடக்கும். இதை முன்னரும் சொல்லியிருந்தேன்தானே! அப்படியான இன்னுமொரு கதையைத்தான் இன்று நான் சொல்லப் போகிறேன்.

ஓர் கல்லூரியின் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு ஒரு முக்கியமான பாடம் கற்று தரவரும்பினார்.

அவர் அனைத்து மாணவர்களையும் ஒரு பிளாஸ்டிக் பையை வாங்கிவரச் சொன்னார். பிறகு, அந்த மாணவர்களிடம் உங்களுக்கு எத்தனை மாணவர்கள் மீது வெறுப்பு உள்ளதோ அத்தனை உருளைக்கிழங்குகளை அதனுள்ளே போடச்சொன்னார். மாணவர்களும் அப்படியே செய்தனர்.

மாணவர்கள் சிலர் இரண்டு உருளைக்கிழங்குளும் வேறு சிலர் 3 முதல் 5 உருளைக் கிழங்குகளையும் அதற்குள் போட்டனர்.

அந்த உருளைக்கிழங்கு பையை எங்கு சென்றாலும் வைத்திருக்கவேண்டும். இப்படி ஒருவாரம் செயற்படவேண்டும்.

அப்படி மாணவர்களும் உற்சாகமாக செய்ய ஆரம்பித்தனர்.

முதல் இரண்டு நாட்கள் ஆர்வமாக ஆரம்பித்தவர்கள் பிறகு அவர்களுக்கு அதை எடுத்து செல்வது சிரமமாக எண்ணினர்.

உருளைக்கிழங்கு அழுக ஆரம்பித்ததால் துர்நாற்றமும் ஏற்படத் தொடங்கியிருந்தது. எப்படியோ ஒருவாரம் உருளைக்கிழங்குகளுடன் கழித்து விட்டனர்.

ஆசிரியர் அனைத்து மாணவர்களிடத்தும் கருத்தை கேட்டார். அனைத்து மாணவர்களும் ஒரே பதில் சொன்னார்கள்.

நாங்கள் இதனால் பட்ட சிரமம் கொஞ:சநஞ்சமல்ல. அப்படி சிரமத்துக்குள்ளானோம். என்பதே அந்தப் பதிலாகும்.

“இதன் துர்நாற்றமும், சுமந்து செல்லும்போது ஏற்பட்ட வலியும் மிகவும் சிரமமாக இருந்தது ஐயா. என்று தெரிவித்தனர்.

அதற்கு ஆசிரியர் சொன்னார்

இப்படித்தான் பிறர் மீது வைத்திருக்கும் வெறுப்பும் நம் மனப்பாரத்தை அதிகரிக்கும். அது நம் மனதை

கெடுத்துவிடும். இது நம்மை நாமே கெடுத்துக் கொள்ளும் ஒரு செயல். எனவே இந்த பையை தூக்கி குப்பையில் வீசி எறிவதுபோல் பிறர் மிது வைத்திருக்கும் வெறுப்பை மனதிலிருந்து தூக்கி எறிவோம். மனதை சந்தோஷமாக வைத்து அனைத்து செயல்களிலும் வெற்றியும் காணுவோம் என்றார் அந்த அசிரியர்.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார். சரி, இக்கதைக்குப் பொருத்தமான ஒரு குறள் சொல்லுங்கள் பார்க்கலாம்.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை வீயாது அடி உறைத்து அற்று. என்று சத்தியன் சொன்னான்.

இதன்பொருளை யாராவது சொல்லுங்கள்? வாத்தியாரப்பு கேட்டார்.

தீயச்செயல்களைச் செய்தவர்களுக்கான துன்பம் அவர்களின் நிழல்போல இருக்குமாம். அதாவது, அவர்களின் காலடியிலேயே நிழல தங்கியிருத்தலைப் போன்றதாம். வித்தியன் சொன்னான்.

நல்லது பிள்ளைகள், எல்லோரும் சென்று நாளை வாருங்கள் என்று சொல்லி வாத்தியாரப்பு போனார். பிள்ளைகளும் போய்க்கொண்டிருந்தார்கள்

17.

## சிந்தித்தால் சிரிப்பு வரும்.

ஒரு வீட்டுக்கு வேண்டாத விருந்தாளி வந்திருந்தார். கணவன், மனைவியிடம் காபி போட்டு கொண்டுவருமாறு சொன்னான்.

இங்கே காபிபொடியும் இல்லை. சர்க்கரையும் இல்லை. அடுப்பங்கரையிலிருந்து சத்தமிட்டாள் அவர் மனைவி.

எப்போதும் உனக்கு பஞ்சப்பாட்டுதான். என்று கணவன் சத்தமிட்டான்.

அதற்கு, அவளும் எதிர்த்து வாய்த்தர்க்கம் புரிந்தாள். இறுதியில் இருவருக்குமிடையிலான வாய்பேச்சு முற்றியது. இவனுக்குகட கோபம் வர, அவள் முகத்தில் அறைந்து விடுகிறான்.

இந்த அநியாயத்தை கேட்க ஆளில்லையா. என்று அழ ஆரம்பித்தாள்.

இந்த அமளிதுமளியை கண்ட விருந்தாளி சொல்லிக்கொள்ளாமலேயே அங்கிருந்து வெளியேறினார்.

அவர் வெளியேறி விட்டதை உறுதி செய்ததும்

கொல்'' என்று கணவனும் மனைவியும் சிரித்தனர்.

எப்படி இருந்தது என் நடிப்பு. அடிப்பதுபோல் அடித்தேனே. என்றான் கணவன்.

ஆஹா..! அழுவதுபோல் அழுதேனே..! எப்படி இருந்தது என் நடிப்பு. என்றாள் மனைவி.

பிரமாதம். என்றான் கணவன்.

இப்ப பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

நானும் போவதுபோல் போய்விட்டு திரும்பிவிட்டேன் பாருங்கோ..! அந்த விருந்தாளிதான் அப்படிச் சொல்லிக் கொண்டு உள்ளே வந்தான்.

வாத்தியாரப்புவோடு சேர்ந்து, மாணவர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கத்தொடங்கினர்.

மாணவர்களே..! கதையின் நீதி எதைச் சொல்கிறது வாத்தியரப்பு கேட்டார்.

உள்ளத்தில் ஏதோ ஒன்றை வைத்து வெளியில் பகட்டாக பேசி வாழ நினைக்கும் நடிப்பு என்றுமே உதவாது என்பதையே எடுத்துக் காட்டுகிறது. தீபிகா சொன்னாள்.

கெட்டிக்காரத் தீபிகா. எல்லோரும் போய் நாளை வாருங்கள்.

18

## தவளையும் மனிதனும்.

சூழ்நிலைக்கு ஏற்ப மாறக் கூடிய சக்தி மனிதனுக்கும் தவளைக்கும் ஒரே மாதிரி தான் இருக்கிறது. இது பற்றி யாருக்காவது தெரியுமா?

எல்லோரும் ஒருவரை ஒருவரை உற்றுப் பார்த்தனர். வாத்தியாரப்பு புரிந்துகொண்டார்.

ஒரு தவளையை பிடித்து தண்ணீரில்போட்டு கொதிக்க வையுங்கள். தண்ணீரின் வெப்பம் அதிகரிக்கும்போது தவளை தன் உடலை அந்த வெப்பநிலைக்கு ஏற்ப மாற்றி கொண்டே வரும். வெப்பம் ஏற ஏற தவளையும் அந்த வெப்பநிலைக்கு ஏற்ப தன் உடலை மாற்றி கொள்ளும்.

தண்ணீர் கொதி நிலையை அடையும்போது வெப்பத்தை தாங்கமுடியாமல் தவளை பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்க முயற்சி செய்யும்.

ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் தவளையால் வெளியேற முடியாது போய்விடும். அந்தளவுக்கு அதன் சக்தி வலுவிழந்து போயிருக்கும்.

ஏன் என்றால் தவளை,

வெப்பத்துக்கு ஏற்ப தன் உடலை மாற்றி கொண்டே வந்ததால் அது வலுவிழந்து போன சிறிது நேரத்தில் தவளை இறந்துவிடும்.

பிள்ளைகளே! இங்கே எது அந்த தவளையை கொன்றது?

கொதிக்கும் நீர்தான். மகிழ்நன் சொன்னான்.

ஆமா கொதிக்கும் நீர்தான்" இனியவனும் சொன்னான்.

எப்போது தப்பித்து வெளியேற வேண்டும் என்று சரியாக முடிவெடுக்க முடியாமல் போனதோ அந்த இயலாமைதான் தவளையைக் கொன்றது. ரஜித்தனா சொன்னாள்.

ரஜித்தனாவின் பதில் மிகச்சரியானது. வாத்தியரப்பு சொன்னார்.

நாமும் அப்படித்தான் எல்லோரிடமும் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து போகிறோம்.

ஆனால் நாம் எப்போது அனுசரித்து போகவேண்டும்? எப்போது எதிர்கொள்ள வேண்டும்? என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

மனரீதியாக, உடல்ரீதியாக, பணரீதியாக மற்றவர்கள் நம்மை நசுக்க ஆரம்பிக்கும்போது நாமும் சுதாகரிக்காமல் போனால் மீண்டும் அதையே தொடர்ச்சியாக எம்தீது திணக்க ஆரம்பிப்பர்.

உடலில் வலிமை இருக்கும்போதே அவர்களிடமிருந்து தப்பித்துவிடுதல் நன்று. நாம் அனுமதித்தால் ஒழிய நம்மை அழிக்க எவராலும் முடியாது.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார்.

எல்லோர் முகங்களிலும் வெற்றி ரேகைகள் ஒளியாய் வீசிக்கொண்டிருந்தன.

இதற்குப் பொருத்தமான பழமொழஜ ஒன்று சொல்லுங்கள் பிள்ளைகள்? வாத்தியரப்பு கேட்டார்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். எல்லோரும் ஒருமித்து கோரசாகச் சொன்னார்கள்.

வாத்தியாரப்பு உள்ளம் மகிழ்ந்தார்.

19.

## அன்பு செல்வம் வெற்றி

ஒரு பெண் அவளுடைய வீட்டைவிட்டு வெளியேறியபோது மூன்று முதியவர்கள் வீட்டின் முன் அமர்ந்திருப்பதை பார்த்தாள்.

அவர்களைப் பார்த்த அப்பெண் நீங்கள் யாரென்று எனக்கு தெரியவில்லை, இருந்தாலும் உங்களை பார்த்தால் பசியுடன் இருப்பதாக தெரிகிறது. அதனால் என் வீட்டிற்கு வாருங்கள். நான் ஏதாவது சாப்பிடுவதற்கு தருகிறேன் என்று அப்பெண் அம்மூவரையும் பார்த்து கூறினாள்.

அதற்கு அம்மூவரும் வீட்டில் உன் கணவன் இருக்கிறாரா? என்று கேட்டனர்.

அதற்கு அவள், அவர் வீட்டிலில்லை. வெளியே சென்றிருக்கிறார் என்று பதிலளித்தாள்.

அப்பொழுது அவர்கள், அப்படியென்றால் உனது கணவர் வரும்வரை நாங்கள் வரமாட்டோம் என்று கூறி அவ்விடத்திலேயே இருந்தனர்.

மாலையில் அவளுடைய கணவன் வீட்டிற்கு வந்தபொழுது அவள் நடந்தவற்றை கூறினாள்.

அதற்கு அவன், நான் வீட்டிற்கு வந்துவிட்டேன்தானே என்று கூறி அவர்களை அழைத்துக்கொண்டு வா என்று சொன்னான்.

அவள் வீட்டிலிருந்து வெளியே வந்து அம்மூவரையும் அழைத்தாள்.

அதற்கு அவர்கள் நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது என்று கூறினார்கள்.

ஏன் அப்படி என்று அவர்களிடம் அவள் கேட்டாள்.

அதற்கு அவர்களில் ஒரு முதியவர் இன்னொருவரை காண்பித்து இவர் செல்வம் என்றும், மற்றொருவரை காண்பித்து இவர் வெற்றி என்றும் நான் அன்பு என்றும் கூறினார்.

நீ உள்ளே சென்று உன் கணவனிடம் எங்கள் மூவரில் யார் உன் வீட்டிற்கு வரவேண்டும் என்று ஆலோசனை செய்து எங்களிடம் சொல் என்று அவளிடம் கூறினார்.

அப்பெண் வீட்டினுள் வந்து தன் கணவனிடம் அந்த முதியவர் கூறிய அனைத்தையும் கூறுகிறாள். அதை கேட்ட அவளுடைய கணவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது! என்று கூறிவிட்டு, நாம் நம் வீட்டிற்கு

செல்வத்தை அழைப்போம். அவர் நம் வீட்டை செல்வத்தால் நிரப்பிவிடுவார் என்று தன் மனைவியிடம் கூறினான்.

அதை கேட்ட அவருடைய மனைவி அதற்கு அதிருப்தி தெரிவித்தாள். ஏன் நம் வீட்டிற்கு வெற்றியை அழைக்கக்கூடாது? என்று கேட்டாள்.

இவை அனைத்தையும் செவியேற்று கொண்டிருந்தபடி, வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த அவர்களுடைய மகள் கேட்டாள்

ஏன் நாம் அன்பை அழைக்கக்கூடாது? அவரை அழைத்தால் நம் வீட்டை அன்பால் நிரப்பிவிடுவார் அல்லவா? என்று மகள் தன் கருத்தை கூறினாள்.

இதை கேட்ட அவளுடைய பெற்றோர் தங்களுடைய மகளின் ஆசையின்படி அன்பை வீட்டிற்கு அழைக்க முடிவு செய்தனர்.

நீ வெளியே சென்று அன்பை நம் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுவா என்றான், கணவன்.

அப்பெண் வெளியே வந்து அம்மூவரையும் பார்த்து உங்களில் யார் அன்பு, அவர் என் வீட்டிற்கு

விருந்தாளியாக வரலாம். அவரை நான் அன்புடன் அழைக்கிறேன் என்றாள்.

அதைக்கேட்ட அன்பு வீட்டிற்குள்ளே செல்கிறார். அவரை பின் தொடர்ந்து மற்ற இருவரும் செல்கின்றனர்.

இதைப் பார்த்த அப்பெண், மற்ற இருவரிடமும் ஏன் நீங்கள் வருகிறீர்கள்? நான் அழைத்தது அன்பை மட்டும் தானே? என்று ஆச்சரியப்பட்டு கேட்டாள்.

அதற்கு அம்மூவரும் அப்பெண்ணிடம் ஒன்றாக சொன்னார்கள்

நீ செல்வத்தையோ அல்லது வெற்றியையோ அழைத்திருந்தால், மற்ற இருவரும் வெளியே இருந்திருப்போம். ஆனால் நீ அன்பை அழைத்திருக்கிறாய். எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு செல்வமும், வெற்றியும் இருக்கும் என்று பதிலளிக்கிறார்கள்.

பார்த்தீர்களா பிள்ளைகள். ஒருவர் மற்றவர்கள் மீது எந்தளவு அன்புடையவர்களாக இருக்கிறார்களோ அந்தளவு செல்வமும் வெற்றியும் நம்மை நாடி வரும். இதுவே உண்மையும் ஆகும்.

அருமையான கதை இது. சந்தோஸ் சொன்னான்.

ஆமாம், அன்புதான் முதலில் வேண்டும் என்று எல்லோரும் கூட்டாகச் சொன்னார்கள்.

20.

**ஊரை மறந்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

பிள்ளைகளே கணிதமேதை ஐயன்ஸ்டீனை பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? ஒரு கேள்வியோடு அன்றைய மாலைப்பொழுது ஆரம்பமானது.

ஆமாம்... ஆமாம்... என்றனர்.

அவர் வாழ்வில் நடந்த ஒரு சுவையான சம்பவத்தையே இங்கு நான் சொல்லப்போகிறேன். இந்தச்சம்பவம் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். இருந்தாலும் சொல்லுகிறேன்.

உலக புகழ் பெற்ற விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் ஒரு சமயம் ரெயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அங்கே அவர், மனதிற்குள் ஒரு கஸ்டமான கணக்கிற்கு விடை தேடிக்கொண்டிருந்தார். அப்போது டிக்கெட் பரிசோதகர் வந்தார்.

வந்தவர் ஒவ்வொருவரிடமும் டிக்கெட் வாங்கி சோதித்து கையெழுத்து போட்டார். பிறகு அல்பர்ட் ஐன்ஸ்டீனிடம் டிக்கெட் கேட்டார்.

அவர் தான் அணிந்திருந்த கோட்டு பைக்குள் கையை விட்டு டிக்கெட்டைத் தேடினார். அது எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. டிக்கெட் பரிசோதகர் அவரை உற்று

பார்த்தார். அவர் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் என்பதை அறிந்து கொண்டார்.

பரவாயில்லை ஐயா டிக்கெட்டைத் தேடவேண்டாம் என்று சொல்லிக்கொண்டே அடுத்த நபரிடம் டிக்கெட்டை வாங்கி பரிசோதித்தார்.

தனது சூட்கேசைத் திறந்து பார்த்தார் ஐயன்ஸ்ரீன். அதனுள்ளேயிருந்த புத்தகங்களை எடுத்து வெளியே போட்டுத்தேடினார். துணிகளுக்கிடையே ஒளிந்து இரக்கிறதா? என்று ஒவ்வொன்றாக உதறி பார்த்தார். அப்போதும் கிடைக்கவில்லை.

இப்ப, மீண்டும் அந்தவழியாக டிக்கெட் பரிசோதகர் வந்தார்.

ஐயா, தாங்களோ உலகப்புகழ் பற்ற மாபெரும் கணிதமேதை. உங்களிடம் டிக்கெட் இல்லாவிட்டால்தான் என்ன? ஏன், வீணாகத்தேடி கஸ்ரப்படுகிறீர்கள்? உங்களால் இந்த நாடு பெருமை பெற்றதல்லவா? உங்களிடம் டிக்கெட் இல்லாவிட்டாலும் பராவாயில்லை. என்று மீண்டும் சமாதானம் செய்தார் அந்த பரிசோதகர்.

உங்களுக்கு பரவாயில்லாமல் இருக்கலாம். நான் எந்த ஊருக்கு போகவேண்டும் என்ற விபரம் அந்த

டிக்கெட்டில் அல்லவா இருக்கிறது. நான் என்ன செய்வது? நான் எந்த ஊருக்குப் போகவேண்டும் என்ற விபரம் இப்ப தெரிந்தே ஆகவேண்டுமல்லவா? என்றார்.

உடன் இருந்த அனைவரும் ஐன்ஸ்ரீனின் பதில் கேட்டு அதிர்ந்தனர்.

அப்புறமென்ன? அந்த டிக்கெட் கிடைக்கவேயில்லை. ரயில் அடுத்த ஸ்ரேசனுக்கு வந்ததும் பரிசோதகர் ஐன்ஸ்ரீனை உடன் அழைத்து சென்று தொலைபேசியின் மூலம் அவர் மனைவியடம் தொடர்புகொள்ள செய்தார்.

ஐன்ஸ்ரீன் தன் மனைவியிடம், டியர், நான் வீட்டை விட்டுப் போகும்போது எந்த ஊருக்குப்போவதாக உன்னிடம் சொல்லிவிட்டு வந்தேன். என்று விசாரித்தார்.

மனைவி, தன் கணவர் போகவேண்டிய ஊரைச் சொன்னார். உடனே அவர் அதனை தனது டயரியில் குறித்துக்கொண்டார்.

பிறகு ரயிலில் ஏறிப்பயணம் ஏறினார். தான் போகவேண்டிய ஊர் போய்ச்சேர்ந்தார் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன்.

பிள்ளைகள் முளிக்க முளிக்க ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

## 21.

## மன்னனும் மந்திரியும்.

பிள்ளைகளே! மன்னன் மந்திரி கதை தெரியும்தானே!

தெரியாது வாத்தியாரப்பு தெரியாது! என்றனர்.

ஆ...ஆ... இப்ப அப்படியொரு கதைதான் நான் இப்ப சொல்லப்போகிறேன்.

மாலைநேரம் அது. அந்த நாட்டின் மன்னன் தன் மந்திரியுடன் மாறுவேடத்தில் நகர்வலம் வந்துகொண்டிருந்தான். நகருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு இடத்திலிருந்த குடிசையொன்றின் வாசலில் சோகமே உருவாக ஒரு மனிதன் அமர்ந்திருந்தான். அவனை முன்பின் எப்பவுமே மன்னன் பார்த்திராத தோற்றம். மன்னனுக்கு அவனைக் கண்டதும், திடீரென்று எரிச்சலும் ஆத்திரமும் வந்தது.

இவனைப்பார்த்ததும் இப்படி தனக்கு எரிச்சலும் ஆத்திரமும் வருகிறதே அது ஏன்? என்பதும் மன்னனுக்கே அதிசயமாக இருந்தது.

மன்னன் அவசரமாக நகர்வலத்தை முடித்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பும்போது மந்திரியைக் கேட்டான்.

மந்திரியாரே, அங்கு அமர்ந்திருப்பவன் யார்? அவனை இதுவரை நான் கண்டதேயில்லை,. ஆனால் அவனைப் பார்த்ததுமே அவன் மீது தீராத வெறுப்பு வந்தது. அந்தநேரமே அவனைக் கொன்றுவிடலாமோ? என்று கூட யோசித்தேன். ஏன் எனக்கு இப்படி ஓர் எண்ணம் வரவேண்டும்?"

மன்னனின் கேள்விக்கு மந்திரியால் பதில்சொல்ல முடியவில்லை.

எனக்கு சிலநாள் அவகாசம் கொடுங்கள் மன்னா. இதற்கான சரியான காரணத்தை அறிந்து சொல்கிறேன். என்றான் மந்திரி.

சிலநாள்களில் அரண்மனையின் சுவர்களெல்லாம் சிதைந்து இருந்ததை அவதானித்த மந்திரி இதனை விரைவில் சீரமைக்க வேண்டும். சீரமைப்பில் சந்தனமரங்களைப் பயன்படுத்தினால் வாசனையாகவும் இருக்கும் என்று மன்னனிடம் ஆலோசனை கேட்டான் மந்திரி. அதற்கு மன்னனும் சம்மதம் சொன்னான். அரண்மனை, அந்தப்புரம் எல்லாவற்றையும் சந்தன மரங்களால் அலங்கரித்தான் மந்திரி. அரண்மனை அழகாக மட்டுமில்லை நல்ல நறுமணமாகவும் இருந்தது.

நாட்கள் பல நகர்ந்துகொண்டிருந்தன.

மாறுவேடத்தில் நகர்வலம் வந்தார் மன்னன். அன்றைக்கும் அதே பழைய இடத்தை அடைந்ததும் அதே மனிதன் குடிசையின் முன் அமர்ந்திருந்தான். மன்னனுக்கோ ஆச்சரியம்.

மந்திரி, ஞாபகமிருக்கிறதா? சிலநாட்களுக்கு முன், எனக்கு இவனைப் பார்த்தாலே அருவருப்பாக இருக்கிறது என்று கூறினேனே! நீங்களும் கொஞ்ச நாட்களுக்குப்பின் காரணம் சொல்வதாகச் சொன்னீர்கள். ஆனாலும், இன்னும் சொல்லவில்லையே! அது ஏன்? ஆனால், இதென்ன அதிசயம்! இன்று இவனைப் பார்த்ததும் எரிச்சலோ ஆத்திரமோ ஏற்படவில்லையே? பதிலாக அவனிடம் சென்று அன்பாக உரையாடவேண்டும். அவனை ஆரத்தழுவி நண்பனாக்கி பழகவேண்டும் என்றல்லவா என் மனம் சொல்கிறது? இதென்ன விந்தை? என்று அரசன் சொன்னபோது மந்திரி புன்னகைத்தார்.

அதுதான் எண்ணத்தின் வலிமை மன்னவா. இவன் ஒரு சந்தனமர வியாபாரி. அண்மைக்காலமாக, சந்தனமரம் வாங்குமளவுக்கு நம்நகரில் வணிகவசதி இருக்கவில்லை. அதனால், இவனுக்கு வியாபாரத்தில் பெருநட்டம் ஏற்பட்டிருக்கிறது. வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்தான். நாட்டின் மன்னனான தாங்கள் இறந்தால் தங்களை எரிக்க சிதை அமைக்கவாவது சந்தன மரங்கள் பயன்படும் என்று நினைத்து தங்கள்

மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அப்போது அவனிடம் இருந்த அந்த எண்ணமே சில நாட்களுக்கு முன் இவனைக் கண்ட தங்களிடம் பெருவெறுப்பாக வெளிப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் விசாரித்து அறிந்துகொண்டேன். அரண்மனை சீரமைப்புக்காக பெருந்தொகையான சந்தனமரங்களை கொள்வனவு செய்தேன்.

இப்போது இவனுக்கு பெருத்த இலாபம் கிடைத்திருக்கிறது. அந்த இலாபத்திற்குக் காரணமான மன்னன் நீடூழி வாழவேண்டும் என்று மனதார வாழ்த்திக் கொண்டிருக்கிறான். அந்த நல்லமனமே உங்களை அவனுடன் பழகவும் அவனுடன் அன்பு பாராட்டவும் உங்கள் எண்ணங்கள் உங்களைத் தூண்டுகின்றன. என்று மந்திரி சொல்லி முடித்தான்.

வாழ்க்கையே கொடுக்கல் வாங்கல் தான். மற்றவர்கள் மீது நாம் அன்பு செலுத்தினால் அதன் பிரதிபலனாக இன்னும் அன்பை நிச்சயம் பெறுவோம். மற்றோரை வெறுத்தால் நாமும் வெறுத்து ஒதுக்கப்படுவோம். இன்னொருவருக்கு தீங்கு நினைக்கும்போது அதுவே எதிர்மறை எண்ணமாய் மாறி அவரையும் எம்மை வெறுக்கவைக்கிறது.

மன்னன் தன் அவசர எண்ணத்திற்காக வருந்தினான்.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார்.

இதைத்தான் ஊர்களிலே தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்று சொல்லுகிறார்கள் போலும். இனியவன் முந்திரிக்கொட்டைபோல் சொன்னான்.

விஞ்ஞான ரீதியாகச் சொன்னால், ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் எப்போதும் இருக்கும். வித்தியன் சொன்னான்.

நல்ல எண்ணங்களைக் கொண்டிருந்தாலே போதும். எப்போதும் நம்மைச் சுற்றி நல்லதே நடக்கும்! என்று விளக்கினார் வாத்தியாரப்பு. புரிந்துகொண்டதற்கு அறிகுறியாக பிள்ளைகள் தலையை அசைத்தனர்.

## 2

## முயற்சிகள் தவறலாம் முயற்சிக்க தவறக்கூடாது.

பிள்ளைகளே முயற்சி பற்றி முன்பு சொல்லி இருந்தேனல்லவா? இன்னும் அப்படியான ஒரு கதையைத்தான் நான் சொல்லப் போகிறேன்.

முயற்சிகள் தவறிப் போகலாம். முயற்சிக்கத் தவறாகக் கூடாது.

ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் பணியாளராக ஒருவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த நிறுவனத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட மேலாளர் அங்கு பணி புரியும் அனைவரின் இ–மெயில்

முகவரியைக் கேட்டார். கம்ப்யூட்டர் பற்றி ஏதும் தெரியாத அந்த தரை துடைக்கும் பணியாளருக்கு இ—மெயில் முகவரி கிடையாது. எனவே, தனக்கு, இ—மெயில் முகவரி இல்லை என்று மேலாளரிடம் தெரிவித்து விட்டான்.

கம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்த்து வருபவருக்கு இ—மெயில் இல்லை என்றால், எப்படி? என்று கூறி, அந்த பணியாளரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

வேலை இல்லை என்றதும் அந்த மனிதருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. தனது சேமிப்பில் இருந்த ஆயிரம்ரூபாயை வைத்துக்கொண்டு, சந்தைக்கு சென்றார். அங்கே வெங்காயம் வாங்கினார். அதனைக் குடியிருப்புப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்று கூவிக்கூவி விற்றான்.

சில ஆண்டுகளில் மிகப்பெரிய வெங்காய வியாபாரியாக ஆகிவிட்டான் அவன். பல இலட்சம்ரூபாவுக்கும் சொந்தமானவனாக இருந்தான். இந்தச் சூழ்நிலையில், ஒரு வங்கியில் கணக்கு தொடக்குவது தொடர்பாக வங்கி ஊழியர் அந்த வெங்காய வியாபாரியை சந்தித்தார். கணக்குத் தொடங்குவதற்கான விவரங்களை படிவத்தில் பூர்த்தி செய்துவிட்டு இ—மெயில் முகவரியை கேட்டார். அதற்கு அந்த மனிதர் தனக்கு கம்ப்யூட்டர் பற்றி ஏதும்

தெரியாது என்றும் எனவே இ–மெயில் முகவரி இல்லை என்றும் பதில் தந்தான்.

உடனே அந்த வங்கி ஊழியர், இ–மெயில் இல்லாமலேயே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி இருக்கிறீரகளே? உங்களுக்கு கம்ப்யூட்டர், இ–மெயில், இண்டர்நெட் ஆகியவை தெரிந்திருந்தால் எந்த அளவுக்கு முன்னேறி இருப்பீரகள் தெரியுமா! என்று ஆச்சரியமாக கேட்டாராம்.

உடனே, அந்த வெங்காய வியாபாரி, அது தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன். என்றான் வியாபாரி.

எனவே, வாய்ப்புகள் உங்களை விட்டு விலகிச் செல்லும்போது வருத்தப்படாதீர்கள். முயற்சி செய்யுங்கள். அதைவிட பெரிய வாய்ப்பு உங்களைத் தேடி வரும்.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார்.

நடிகர் அமிதாப்பச்சனின் வாழ்க்கையிலும் இப்படியொரு சம்பவம் நடந்ததாக அன்றைக்கு எங்களுக்கு நீங்கள் சொல்லியிருந்தீர்கள். தீபிகா சொன்னாள்.

தீபிகாவுக்கு நல்ல ஞாபகசக்தி. பாராட்டுக்கள் தீபிகா. வாத்தியாரப்பு முன்மொழிந்தார்.

23.

## மகாத்மா காந்தியும் திருவள்ளுவரும்

உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்டோய்க்கு கடிதம் எழுதினார் மகாத்மா காந்தி.

தம்மைத் துன்புறுத்துவோரையும் தண்டிக்காது மன்னிக்கும் குணம் பற்றி தாங்கள் கூறியிருக்கும் செய்தி என்னை மிகவும் கவர்ந்தது என்றார்

அதற்கு எழுத்தாளர் லியோ எழுதிய பதில்.

இந்தப் பெருமையும் புகழும் எனக்கு உகந்ததல்ல் உங்கள் தேசத்தில் தமிழ்நாட்டில் பிறந்த திருக்குறள் எனும் அற்புத நூலைப் படைத்த திருவள்ளுவரையே அது சாரும்.

இதோ அப்பொருள் உணர்த்தும் குறள் என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த திருக்குறளை அதிலே குறிப்பிட்டிருந்தார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல் என்பதே அத்திருகுறளாகும்

இந் நிகழ்வுக்குப் பின்னர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறளை காந்தியடிகள் படித்தாராம். அதன் சுவை அறிந்த அவர் பல

மேடைகளிலும் அதன் பெருமைபற்றிச் சொல்லிக்கொண்ட திரிந்தாராம். நாடு விட்டு நாடு சென்றாலும் அங்கேயும் அதன் பெருமை பற்றித்தான் பேசுவாராம்.

எனக்கு அடுத்த பிறவி மனிதப் பிறவியாக இருக்குமானால் கட்டாயம் தமிழராகவே பிறக்க வேண்டும். என்று எழுதியிருந்தாராம்.

ஏன் வாத்தியாரப்பு, மகாத்மா காந்தி அப்படி எழுதியிருந்தார்? ரஜித்தனா கேட்டாள்.

ஆமாம், ரஜித்தனாவின் கேள்வி நல்ல கேள்வி. இதற்கான பதிலை மகாத்மா காந்தி அந்தக் கடிதத்திலேயே எழுதியிருந்தாராம்.

திருக்குறளை ஆங்கிலத்தில் படிக்கும்போதே இத்தனை சுவையாக இருக்கின்றதே! திருக்குறளை அதன் மூலமொழியில் படித்தால் எத்தனை சுவையாக இருக்கும்? அதனால், நான் ஒரு தமிழராகப் பிறந்தால் அதனை இன்சுவையோடு பருகலாம். அதற்காகவே நான் தமிழனாகப் பிறக்க வேண்டும். என்று எழுதியிருந்தாராம்.

பிள்ளைகளே தமிழராகப் பிறந்ததிற்கு நாங்கள் எல்லோரும் பெருமை கொள்ளலாமல்லவா?

மிக்க சந்தோசம் வாத்தியாரப்பு மிக்க சந்தோசம். எல்லோரும் ஒருமித்துச்சொல்லி மகிழ்ந்தனர்.

## 24.

## நிலம் யாருக்குச் சொந்தம்..?

பிள்ளைகளே சொத்து, சுகம் இவை எல்லாம் நிலையற்றவை. எல்லாம் அந்தந்த காலத்திற்கு ஏற்றால்போல் அவரவருக்கு இருந்தால் போதுமானதே! அளவுக்கு மிஞ்சி ஆசை வைத்தால் வீணான துன்பங்களையே நீங்கள் அனுபவிக்க நேரிடும்.

இதோ ஒரு கதை சொல்லுகிறேன்

ஒரு பெரும் செல்வந்தர் தம்மை சந்திக்க வந்த வயதான துறவியை அழைத்துப்போய் தமக்குச் சொந்தமான வயல், வரப்பு, தோப்புகள் எல்லாவற்றையும் பெருமையுடன் காட்டி, இவ்வளவும் என்னுடையது சுவாமி. என்றாராம்.

இல்லையேப்பா! இதே நிலத்தை என்னுடையது என்று ஒருவன் சொன்னானே! துறவி கேட்டாராம்.

அவன் எவன்? எப்போது சொன்னான்? சீறினான் அந்த செல்வந்தன்.

ஐம்பது வருடத்திற்கு முன் என்றார் துறவி.

செல்வந்தன் திகைத்துப்போனான். பிறகு சொன்னான்,

அது என் தாத்தாதான். ஐம்பது ஆண்டுகளாக நாங்கள் இந்த நிலத்தை யாருக்கும் விற்கவேயில்லை. என்றான்.

இருபது ஆண்டுகளுக்கு முன் வேறொருவர் இது என் நிலம் என்றாரேயப்பா. என துறவி கேட்க.

அவர் என் அப்பாவாக இருக்கும் என்றான் செல்வந்தன்.

இந்த நிலம் என்னுடையது...! இந்த நிலம் என்னுடையது..! என்று என்னிடம் காட்டிய அந்த இருவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்? என்று கேட்டார் துறவி.

அதே வயலுக்கிடையில் தெரிந்த இரு மண்படங்களை காட்டி அந்த மண்டபங்களுக்கு கீழேதான் அவர்களைப் புதைத்து வைத்திருக்கிறோம். என்றான் அந்த செல்வந்தன்.

துறவி சிரித்துக்கொண்டே சொன்னார்.
நிலம் இவர்களுக்குச் சொந்தமா...? அல்லது இவர்கள் நிலத்திற்குச் சொந்தமா? என் நிலம், என் சொத்து, என் செல்வம் என்றவர்கள் நிலத்திற்குச் சொந்தமாகி விட்டனர். அவர்கள் இப்போது இல்லை. ஆனால் நிலம் மட்டும் இருக்கிறது. இது என்னுடையது எனக்கூறும் நீயும் ஒருநாள் இந்த நிலத்திற்குள் புதைக்கப்படுவாய்.

உன் மகன் வந்து இது என்னுடையது என்பான் என்று கூறி முடித்தார் துறவி.

செல்வந்தனோ தன் அறியாமை எண்ணி தலை குனிந்தான்.

உலகில் எதுவுமே நிலையாவை அல்ல பணம், சொத்து, பதவி எல்லாம் எப்பவோ ஒருநாள் நம்மை விட்டுச் சென்றுவிடும். அதனால் அவற்றின் மீது அளவுக்கு மீறி பற்று வைக்க கூடாது, மனதிலிருந்து அகந்தையை தூக்கி எறியுங்கள். அன்புடன் எல்லா எயிர்களுக்கும் சேவை செய்யுங்கள். நாம் எல்லோரும் சமம் என்பதை உணருங்கள். என்று சொல்லிவிட்டு துறவி போய்க்கொண்டிருந்தாராம்.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்தார். பிள்ளைகள் எழுந்து போனார்கள். போகும்போது நாளையும் கட்டாயம் வருவோம் வாத்தியரப்பு. என்றனர்.

## 25.
## குட்டிக்கதை

வியாபாரத்தில் ஒரு தந்திரம் இருக்கவேண்டும். அப்படியான ஒருகதைதான் இப்ப நான் சொல்லப் போகிற கதை.

கதை சொல்லத் தொடங்கினார் வாத்தியாரப்பு.

பேருந்து நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர் அந்தப் பேருந்தில் பழக் கூடையுடன் ஏறினார்.

ஐந்து பழங்கள் பத்து ரூபாய்! என்று கூவி, பழங்களை விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் கீழே இறங்கிப்போனார்.

இளைஞன் ஒருவன் பேருந்தில் ஏறினான். ஆறு பழங்கள் பத்து ரூபாய்! என்று கூவினான். அவனுக்கு நல்ல விற்பனை!

மற்றொரு பேருந்தில் ஏறிய இதே முதியவர் அங்கும் ஐந்து பழங்கள் பத்து ரூபாய்! என்று விற்க முயன்றார். பலன் இல்லாமல் போகவே, கீழே இறங்கி விட்டார்.

அடுத்து, ஆறு பழங்கள், பத்து ரூபாய் என்று கூவியபடி அந்தப் பேருந்தில் ஏறிய இளைஞன் ஏகத்துக்கு விற்பனை செய்தான்!

மிகப் பெரிய கம்பெனியின் விற்பனை ஆலோசகரான ஒருவர் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார். முதியவரை அருகில் அழைத்தார்.

அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லையே! அவனுக்குப் போட்டியாக நீங்களும் ஆறு பழங்கள் பத்து ரூபாய் என்று விற்றால்தானே உங்களுக்கு விற்பனை ஆகும்.

அதிக கொள்முதல் மூலம் குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி, இலாபத்தைக் குறைத்து அதிக விற்பனை செய்யப் பழகுங்கள் தாத்தா! என்று தனது ஆலோசனைகளை அள்ளி விட்டார்.

முதியவர் சிரித்துக்கொண்டே சொன்னார்

போய்யா, அவன் என் மகன். இந்தப் பழங்களும் அவனுடையவைதான்.

ஆறு பழங்கள், பத்து ரூபாய்னு விற்றால் உடனடியாக வாங்குவதற்கு நம்ம சனங்களுக்கு மனம் வராது.

அதனால் நான், ஐந்து பழங்கள், பத்து ரூபாய் என்று கூவிகிக்கொண்டு போவேன்.

அப்புறமாக ஆறு பழம் பத்துருபாய் என்று அவன் வந்து சொல்லுவான்.

அடடே லாபமா இருக்கே என்று சனங்களும் சட்டுன்னு வாங்கிடுவாங்க. அவன்தான்யா நிஜமான வியாபாரி. சனங்களோட மனதை மாத்திறத்திற்குத்தான் என்னை முன்னாடி அனுப்புகிறான்! என்றார் முதியவர்.

கதை நல்லாயிருந்தது வாத்தியாரப்பு. உதைப்போல இன்னொரு கதை சொல்லுங்கோ வாத்தியரப்பு? என்று மகிழ்நன் பிடிவாதமாக நின்றான்.

ஆமாம், வாத்தியாரப்பு இண்டைக்கு இன்னுமொரு கதை சொல்லுங்கோ? மற்றவர்களும் மகிழ்நனோடு ஒன்றுபட்டு நின்று கேட்டனர்.

வாத்தியாரப்பு சிரித்தார். சரி...! சரி...! சொல்லுகிறேன் என்ற்றார.

கதை சொல்லத்தொடங்கினார்.

எல்லோரும் அமைதியாகவும், ஆர்வமாகவும் இருந்தனர். மகிழ்நன் ஓடி வந்து முன்னு அமர்ந்தான்.

## 26.
## தந்திரம்

வயதான ஒருவரின் வீட்டிற்கு முன்னால் தினசரி இரவு இளைஞர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். அவருக்கு அது மிகத் தொந்தரவாக இருந்தது.

ஒருநாள் இளைஞர்கள் சப்தம் போட்டுக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.
அப்போது அந்தவயதான பெரியவர் அவர்களிடம் போய்,

நான் ஓய்வு ஊதியம் வாங்குபவன். எனக்குப் பிடித்தமான கிரிக்கெட்டை நீங்கள் எல்லோரும் விளையாடுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இப்படி, நீங்கள் தினசரி விளையாடினால் நான் உங்களுக்கு வாரம் நூறுருபாய் தருகிறேன். என்றாராம்.

இளைஞர்களுக்கு மிகவும் ஆச்சரியமாகவும் அதேநேரம் சந்தோசமாகவும் இருந்தனர்.

தாங்கள் விருப்பத்துடன் விளையாடுவதற்குப் பணமா? அந்த ஆர்வத்தில், அவர்கள் தினசரி விளையாடினார்கள். ஒருவாரம் முடிந்தவுடன் பெரியவர்

சொன்னபடியே, அவர்களிடம் நூறுரூபாயை கொண்டு வந்து கொடுத்தார்.

இரண்டாவது வாரமும் விளையாடிவிட்டு, முதியவரிடம் பணம் கேட்டபோது

திடீரென எனக்கொரு மிகப்பெரிய செலவு வந்து விட்டதாகக் சொன்னார்.

ஐம்பதுபதுரூபாய் தான் இருக்கிறது இதை வைத்திருங்கள். என்று சொல்லிக்கொடுத்தார்.

மூன்றாவது வாரமும் விளையாடிவிட்டு முதியவரிடம் பணம் கேட்டபோது

இம்மாத ஓய்வு ஊதியம் இன்னும் வரவில்லை.என்று சொன்னார்.

இந்தாருங்கள் இதை வைத்திருங்கள் என்று சொல்லி பத்துரூபாவைக் கொடுத்தார்.

நான்காவது வாரமும் அவர்கள் பணம் கேட்டபோது தன்னால் இனி வாரம் ஐந்துரூபாய்தான் கொடுக்க இயலும். எனது வருமானம் குறைந்துவிட்டது என்று சொல்லி பணத்தைக் கொடுக்க முற்பட்டபோது இளைஞர்களுக்குக் கடுங்கோபம் வந்து விட்டது.

வாரம் முழுவதும் விளையாடுவதற்கு வெறும் ஐந்து ரூபாய்தானா? இனி நாங்கள் இங்கே விளையாட வரமாட்டோம். என்று கூறிச் சென்று விட்டனர்.

பெரியவருக்கு இப்போதுதான் பரம திருப்தி.

வாத்தியாரப்பு கதை சொல்லி முடித்துவிட்டார்.

எல்லோரும் ரொம்ப ஆரவாரமாக இருந்தார்கள்.

இன்று பௌர்ணமி நிலவு மெது மெதுவாக அந்தப் பனைக்கூடல் வழியாக எழுந்து கொண்டிருந்தான்.

பிள்ளைகளும் எழுந்து போக ஆயத்தமானார்கள்.

## 27.

## வளரும் பயிர்

பிள்ளைகளே வளரும் பயிரை முளையிலே தெரியும் என்றொரு பழமொழி தமிழிலே உண்டல்லவா?

ஆமாம், வாத்தியாரப்பு

அதன் அர்த்தம் தெரியும்தானே?

தெரியும் வாத்தியரப்பு தெரியும்.

ஆ... இந்தப்பழமொழி தொடர்பான ஒரு கதையைத்தான் இன்று நான் சொல்லப்போகிறேன். என்றார்.

கதை சொல்லத்தொடங்கினார்.

மாசிடோனியா மன்னர் ஒருநாள் அவசரமாக கிளம்பிக்கொண்டிருந்தார். அறையின் வாசலை வந்தடைந்தபோது தன் சின்னமகன் தனக்காக நிண்டநேரம் காத்திருப்பதை புரிந்து கொண்டார்.

வா மகனே, என்ன விசயம்? நீண்டநேரமாகவே காத்திருக்கிறாய் போலும்?

ஆம் அப்பா, உங்களிடம் நான் பேசவேண்டும். என்றான் மகன்.

அப்படியா? ஒரு குதிரைப் போட்டியைக் காண்பதற்காக நான் சென்றுகொண்டிருக்கிறேன். என்னுடன் வந்தால் வழியிலே பேசிக்கொண்டு போகலாம். என்று மன்னர் சொன்னார்.

மகனுக்கு ஒரே சந்தோசம். தந்தையுடன் புறப்பட்டு சென்றான் மகன். வழிநெடுகிலும் நிரம்ப விடயங்களைக் கதைத்து கொண்டே வந்தனர்.

கதைத்து கொண்டே போட்டி நடக்கும் மைதானத்திற்கு வந்தனர். மைதானம் சனத்திரளால் நிரம்பி வழிந்தது. சுட்டெரிக்கும் வெயில் வேறு.

மைதனத்தின் மத்தியிலேகுதிரையொன்றை அடக்குவதற்கு பலரும் முயற்சி செய்து தோற்றுப் போயிருந்தனர். இதனால் குதிரை உரிமையாளன் இறுமாப்புடன் கதைக்கத் தொடங்கினான்.

உங்களில் யாருக்காவது தைரியம் இருந்தால் இந்தக் குதிரைய அடக்கிக் காட்டுங்கள்? என்று கொக்கரித்தான்.

வீரத்தின் விளைநிலமான மாசிடோனியாவில் ஒரே ஒரு மெய்யான வீரன்கூட இல்லையா? இது இந்நாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய கேவலமல்லவா?

கூட்டத்தைப் பார்த்து உறுமினான். அவன் எண்ணங்களில் அகங்காரம் வெளிப்படையாகத் தெரிந்தது.

பிலிப் மன்னர் மேடையிலே அமர்ந்திருந்தார். திமிர்பிடித்தவனின் அசிங்க வார்த்தைகள் கேட்ட மன்னர் முகத்தில் கவலைகள் ரேகைகளாப் படந்தன. இதனை அருகிலே இருந்த மன்னரின் பன்னிரண்டு வயது மகன் உற்றுக்கவனித்தான். தந்தையை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தான்.

தந்தையே, நான் குதிரையை அடக்கட்டுமா? மகன் கேட்டான்.

பிலிப்மன்னர் தன் மகனைப் பார்த்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் ஓர் ஏளனம் தெரிந்தது. அதை மன்னர் மகன் அவதானித்தான்.

திரும்பவும், தந்தையிடம் வற்பறுத்திக் கேட்டான். நான் விளையாட்டக்காக கேட்கவில்லை. நிஜமாகவே இந்தக் குதிரையை நான் அடக்கிக் காட்டுகிறேன். அனுமதி கொடுங்கள் தந்தையே! என்று மீண்டும் தந்தையிடம் வற்புறுத்தி நின்றான் மகன்.

குதிரையின் கால்களின் பலம் நன்கு அறிந்திருந்த பிலிப்மன்னர் தன் மகனின் தோற்ற நிலையினையும் அவனின் அடம்பிடிப்பையும் பார்த்து ஏக்கமடைந்தார். ஏதோ ஆர்வக்கோளாறில் கேட்கிறான். என்று உள்ளுக்குள் சிரித்தார்.

ஆனாலும் தன்னுடைய வற்புறுத்தலைக் கொஞ்சமும் குறைத்துக் கொள்ளவில்லை அவன். மீண்டும் மீண்டும் தந்தையிடம் வற்புறுத்திக் கேட்டான்.

சரி, நீ மட்டும் குதிரையை அடக்கி விட்டால் அந்தக குதிரையை வாங்கி உனக்குப் பரிசாகத் தருகிறேன். என்றார்.

பிறகு தன் மகனை மைதானத்திற்கு அனுப்பி வைத்தார் பிலிப்மன்னர்.

மைதானத்தில் இறங்கினான். குதிரையை நெருங்கினான். வானத்தை அண்ணாந்து பார்த்தான். குதிரையின் பளபளக்கும் சருமத்தில் தன் விரல்களை மென்மையாக ஓடவிட்டான். அது குதிரைக்கு இதமாக இருந்திருக்க வேண்டும். மற்றவர்கள் போல் முரட்டுத்தனமாக இழுக்காமல், உடனே தாவி ஏறாமல் மிகவும் தந்திரமாக அவன் மூளை செய்தது.

ஒருமுறை அந்த குதிரையச் சுற்றி வந்தான்.

தன் மென்மை வருடல்களால் அதனைத் தொட்டு மெதுமெதுவாக குதிரையை எதிர்திசையில் திருப்ப முயற்சிசெய்தான். குதிரை திரும்பிக்கொண்டது.

சனத்திரளின் ஆரவாரம், கூச்சல், ஆர்ப்பாட்டம் இவை எல்லாம் பிலிப்மன்னரின் மகனுக்கு உற்சாகம் தந்தன. ஆனாலும், அவனின் கவனம் முழுதும் குதிரையை அடக்குவதிலேயே குறியாக இருந்தது. திரும்பி நின்ற குதிரையில் ஒரே தாவாக மின்னல் வேகத்தில் ஏறி உட்கார்ந்தான்.

ஆ... மகனே..! என் வீரப்புதல்வனே..! என்று வாய்விட்டு கூச்சல் போட்டார் மன்னர். அரங்கத்தில் இருந்த அத்தனைபேரும் துள்ளி எழுந்தார்கள். அவனோ, அந்த குதிரையில் அமர்ந்தபடி மைதானம் முழுவதையும் சுற்றி வந்தான். குதிரையிலிருந்து இறங்கி பெருவீரனை போல் நடந்து வந்துகொண்டிருந்தான். மேடையில் உட்கார்ந்திருந்த மன்னர் இறங்கி ஓடி வந்து மகனை ஆரத்தழுவி கட்டிக் கொஞ்சினார். அவன் வீரத்தோள்களை பிடித்து உற்சாகம் செய்தார்.

இந்த வெற்றி உன்னால் எப்படி சாதிக்க முடிந்தது? அதை எனக்கும் சொல்வாய் மகனே?

அப்பா, அந்தக்குதிரை வேண்டுமென்று சண்டி செய்யவில்லை. சூரியஒளி அதன் கண்களில் விழுந்திருக்கிறது. அதனால் அது வெறிகொண்டு

துள்ளிக் குதித்திருக்கிறது. குதிரையை அது நின்ற திசையின் எதிர் திசைக்குத் திருப்பினேன். அது ஒத்துழைப்புத் தந்தது. அவ்வளவுதான். என்று மகன் சொல்லி முடித்தான்.

குதிரை அடக்குவதை வெறுமனே வெடிக்கையாகப் பார்த்துக்கொண்ட அந்தச் சிறுவன்தான் பின்னாளிலே பல தேசங்களை வென்று வெற்றிவாகை சூடிய மாவீரன் அலெக்ஸ்சாண்டர் என்று சொல்லி கதையை நிறைவு செய்தார் வாத்தியாரப்பு.

சரி பிள்ளைகள், நான் மட்டக்களப்பு கல்முனையில் என் மூத்தமகள் இருக்கிறாவல்லோ!

ஓம்..! ஓம்..!

சில காலங்கள் அங்கே போய் நின்றுவிட்டு வரப்போகிறேன். அங்கேயும் எனக்குப் பேரப்பிள்ளைகள் இரக்கிறார்கள். அவர்களைக் காண ஆசையாக இருக்கிறது. அதுதான் நாளை அங்கே போகிறேன்.

நல்லது தாத்தா. கவனமாக போய் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

வாத்தியரப்பு எழுந்து நடக்கத் தொடங்கினார்.



பகுத்தறியும் செம்மலே!
யாருக்கும் தீங்குகள் எண்ணா
சிவந்த மாணிக்கமே
சாவுக்கு முன்னும்
உற்றார், உறவு, ஊர் என்று
பாங்கு காட்டி வாழ்ந்தீரே!
ஊரின் நன்மை தீமை எதிலும்
உன்னைக் காண்போமே.

உயர்ந்தாய்!
தொழிலால் உயர்ந்தாய்!
எளிமையால் உயர்ந்தாய்!
பண்பால் உயர்ந்தாய்!
பாசத்தால் உயர்ந்தாய்!
தூய குணமுடையோனே
சிவப்பாய் பிரகாசமானவனே
உனை மறவோம் நாமும்.

— சமரபாகு சீனா உதயகுமார் —

ISBN9789554125803

வெளியீடு – அபிஷேக் பதிப்பகம் 077 9229368